Registered as a News Paper in Sri ...ka
பக்கங்கள்: 06
விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAIYL ● மக்கள் தினசரி ●

நாதம் 01 பிரமோதூத ஸூ வைகாசி மீ 17 ஆம் உ வியாழக்கிழமை (31 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹ 06 ஓசை 102

## கடத்தப்பட்ட ஜீப்பைக் கண்டுபிடிக்க புலிகள் உதவியைகேட்கிறது ராணுவம்!

(பொலநறுவை)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அருகேயுள்ள வெலிக்கந்தையில் மகாவலித் திட்ட வேலையிலீடுபட்டுள்ள ஒரு ஜீப் வண்டியை அதில் பயணம் செய்துகொண்டிருந்தவருடனும், சாரதியுடனும் இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றுவிட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து ஜீப் வண்டியையும், அதில் பயணம் செய்தவரையும், சாரதியையும் தேடுவதில் பொலிஸாரும், இராணுவத்தினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஜீப் வண்டியையும், ஆட்களையும் கண்டுபிடிப்பதற்குத் தங்களுக்கு உதவுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவத்தினர் கேட்டுள்ளனர்.



யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மூர்த்தி, செயலாளர் யோகரெட்ணம் யோகி, தலைவர் மகேந்திரராசா, பொருளாளர் சுரேஷ் மாஸ்டர், உப செயலாளர் சுந்தரி ஆகியோர் இறந்த போராளிகளுக்கும் மக்களுக்கும் அஞ்சலி செலுத்துவதையும், தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதேச அரசியற் பொறுப்பாளர்களின் ஒரு பகுதியையும் படத்தில் காணலாம்.

# திங்கள் யாழ். வரும் ஹமீத்

# புலிகளுடன்கிழக்குவிஜயம்

நீதி அமைச்சரும் வடக்கு கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுடன் திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் பற்றி ஆராய்வார்.

திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் திடீர் திடீரென மேற்கொள்ளப்படும் இராணுவக் குவிப்பு நடவடிக்கைகளுக்கும் இராணுவம் மற்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முறுகல்கள் முரசல்கள் ஏற்படாமல் தடுத்து சுமுக நிலைக்கு ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்குமிடையில் நாளை கொழும்பில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளைத்தொடர்ந்து நான் காந்தேதி திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் வரும்

## தமிழ் தினப் போட்டிகள் திருமலையில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் தமிழ்த்தினப் போட்டிகள் திருக்கோணமலையி நடத்தப்படவுள்ளது. இப்போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்களைக் திருக்கோணமலைக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகளை அவ்வப் பாடசாலை அதிபர்களே மேற் கொள்ளவேண்டும் என யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

திருக்கோணமலையில் அனைவருக்கும் இலவசஉணவும், தங்குமிட வசதியும் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (மு)

# மாத்தயா - பிரேமா நாளை சந்திப்பு!

## தற்கொலை

(வவுனியா)

செட்டிக்குளம் பெரியகட்டுப் பகுதியில் காதல் பிரச்சினை காரணமாக இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

முருங்கனைச் சேர்ந்த ஆறுமுகம் (வயது 23) என்பவர் சில காலமாக செட்டிகுளம் வந்து தோட்டம் செய்து வருகிறார் என்றும், கடந்த செவ்வாய்க்கிழமை கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அபிவிருத்திக்கு 8கோடி40லட் இத்தாலிஉதவி

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ள சுகாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இத்தாலிய அரசு எட்டுக் கோடியே நாற்பது லட்சம் ரூபாவுக்குமேல் வழங்கும்.

இப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள், மீளக் குடியமரும் அகதிகள் ஆகியோரின் சுகாதார நடவடிக்கைகளுக்கே இந்த நிதி கிடைக்கவுள்ளது.

இப்பகுதி அவசர உணவுப் பொருள் உதவிகளுக்கு ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாவுக்குமேல் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் படை குறைப்பு பற்றி முக்கிய பேச்சு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா தலைமையிலான விடுதலைப் புலிகள் குழுவினர் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான குழுவினரைக் கொழும்பில் சந்தித்துப்

## சாமின் இடத்திற்கு பெருமாளை எம்.பியாக நியமிக்க முயற்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பதவி வகித்து இந்தியப்படை வெளியேற்றத்துடன் தலைமறைவான அ. வரதராஜப்பெருமாளை பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பதற்கு ஈ. பி. ஆர். எல். எவ். பாராளுமன்றக்குழு முயற்சி செய்வதாகத் தெரியவருகிறது. கொலைசெய்யப்பட்ட சாம் தம்பிமுத்துவின் இடத்துக்கு வரதராஜப் பெருமாளை தமிழர் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட எம். பி.யாக நியமிக்க

## மோட்டார் சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதுண்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா தலைமையிலான விடுதலைப் புலிகள் குழுவினர் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான குழுவினரைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இப்பேச்சுவார்த்தையின் போது, கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருக்கோணமலையில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்தின் முகாம்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாக விடுதலைப்புலிகள் ஜனாதிபதியிடம் வற்புறுத்துவார்கள் எனத் தெரிய வருகின்றது.

இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தரப்பில் மகேந்திரராசாவுடன் செயலாளர் யோகரெட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். இலங்கையின் சார்பில் ஜனாதிபதியுடன் நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தும், முப்படைகளின் தளபதிகளும் கலந்து கொள்வார்கள்.

மேலும் இப் பேச்சுவார்த்தையின் போது முன் பேசப்பட்ட ஆறாவது திருத்தச் சட்ட நீக்கம், வடக்கு கிழக்கு மாகாண சபை கலைப்பு என்பன தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கும்படி விடுதலைப் புலி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் மூழ்கி மீனவர் மரணம்

(சிலாபம்)

சிலாபத்தைச் சேர்ந்த இரு இளம் மீனவர்கள் கடலுக்குள் மூழ்கி இறந்துள்ளனர்.

ஆழ் கடலில் வீசிய கடும் புயலால் இருவரும் படகில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ரயில் நிலையத்தில் பிற்பொக்கட் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

''பிற்பொக்கட்'' காரர்களின் தொல்லை யாழ் மத்திய புகையிரத நிலையத்தில் அதிகரித்ததை தொடர்ந்து ஆங்காங்கே மணிப்பேர்ஸ்களும் கைப்பைகளும் கண்டெடுக்கப் பட்டுவருகிறது. 'பிற்பொக்கட்' திருடர்கள் தாம் திருடிய மணிப்பேர்ஸ்களிலிருந்து பணத்தை சூறையாடிய பின் அவற்றை தாம் விரும்பிய இடத்தில் எறிந்து விட்டுச் சென்ற மணிப் பேர்ஸ்கள் பல கண்டெடுக்கப் பட்டுள்ளன.

இந்த பேர்ஸ்களுடன் பலருடைய அடையாள அட்டைகளும் இருக்கக் காணப்பட்டுள்ளது. இவற்றை உரியவர்கள் பெற்றுக்கொள்ளும் படி மத்திய புகையிரத தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

(லோ)

## கள்ள நோட்டுக் கடத்தல் இரு தமிழர்கள் கைது

500 ரூபா கள்ள நோட்டுக்கள் இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் இரு தமிழர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இது தொடர்பாக இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு சாக்குகளில் இந்த 500 ரூபா கள்ள நோட்டுக்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்திவரப்பட்ட போது பிடிபட்டது.

கொழும்பு - புறக்கோட்டையில் உள்ள தமிழ் வியாபாரியும், மார்போலையில் ஒரு தமிழரும் இவ்வாறு கைதாகியுள்ளனர்.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டனர்.

# அதிபர்கள் தமது உரைகளை 15 நிமிடத்திற்குள் முடிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் வைபவங்கள் தொடர்பாக புதிய விதிமுறைகள் குறித்து சுற்று நிருபம் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி தலைமையில் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்கள் கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை பரிசளிப்புவிழா மற்றும் வைபவங்களில். அதிபர் பதினைந்து நிமிடத்துக்குள் தனது உரையை முடிக்க வேண்டும்.

தேவையற்ற அர்த்தமற்ற

(6ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பதவி வகித்து இந்தியப்படை வெளியேற்றத்துடன் தலைமறைவான அ. வரதராஜப்பெருமாளை பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பதற்கு ஈ. பி. ஆர். எல். எவ். பாராளுமன்றக்குழு முயற்சி செய்வதாகத் தெரியவருகிறது. கொலைசெய்யப்பட்ட சாம் தம்பிமுத்துவின் இடத்துக்கு வரதராஜப் பெருமாளை தமிழர் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட எம். பி.யாக நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரதராஜப்பெருமாள் இப்பொழுது இந்தியாவிலிருப்பதாகவும் ஈ. பி. ஆர். எல். எவ். பாராளுமன்றக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. வரதராஜப் பெருமாள் இன்னமும் மாகாண முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் முன்னணியினரின் தலைமைச் செயற்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் இரண்டாவது தலைமைச் செயற்குழுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா தலைமைதாங்கினார்.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உப தலைவர் கரிகாலன் உட்பட தமிழீழப் பகுதி எங்கும் இருந்து வந்த அரசியற் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். இக் கூட்டம் தொடர்ந்து இன்றும் நடைபெறும்,

## விரயம், ஊழல் ஆகியவற்றிற்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)

ரயில்வே பகுதியில் விரயம் ஊழல் என்பனவற்றிற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன்என்று போக்கு வரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜய பால மென்டிஸ் எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ரயில்வே பகுதி ஊழியர் தொழிற்சங்க கூட்டம் ஒன்றில் அமைச்சர் உரையாற்றினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் ரயில்வே பகுதியின் சேவை மக்களுக்கு இன்று அத்தியாவசியமானது. சில

(6ஆம் பக்கம் பார்க்க)

## அதிபரின் தாக்குதலால் மாணவன் எலும்பு உடைந்தது

(வடமராட்சி)

கல்லூரி அதிபரின் மோசமான தாக்குதலால் 18வயது மாணவனின் கால் எலும்பு உடைந்தது.

வடமராட்சியில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

மேற்படி தாக்குதலுக்குள்ளான மாணவன் மந்திகை வைத்தியசாலையில் காலில் எலும்பு சேதத்திற்குள்ளான நிலையில்சத்திர சிகிச்சைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

இவைபற்றி அறிக்கையில் வடமராட்சி பொற்பதி குடத்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் பாதிப்பிற்குள்ளான மாணவனான சின்னராசா விமலதாஸ்(வயது18) என்பவர் சகமாணவர்களுடன் சிறு சச்சரவில் ஈடுபட்டதாகவும் அதன் காரணமாக பாடசாலை அதிபர் தனது அறையினுள் அழைத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அடகுநகைகள் மீளளிக்க மக்கள் வங்கி நடவடிக்கை

மக்கள் வங்கியில் அடகு வைத்து, தமது நகைகளை மீண்டுக் கொள்வதற்காக 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் பின்பு பணத்தைக் கட்டியவர்களுக்கு எதிர்வரும் ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் அவற்றை மீளளிப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் அடகு வைத்த தமது நகைகளை விரைவாக மீட்டுக்கொள்ள எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதிக்கு முன்பு உரிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குள களஞ்சியத்தில் பழுதான மா விநியோகம்

(யோகபுரம்)

முல்லைமாவட்டத்தில்பாவனைக்கு உதவாத மா முல்லை மாவட்ட உணவு கட்டுப்பாட்டு திணைக்களத்தால் மாங்குளம் உணவு களஞ்சியத்தால் வழங்கப்படுகின்றது.

மாவின் தரம்மிகவும் மோசமாக இருந்தும் இதை

(6ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதுண்டதில் சாவகச்சேரி சங்கத்தானையில் இருவர் படுகாயத்துக்குள்ளானார்கள்.

நேற்று சாவகச்சேரி சங்கத்தானையில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஏ. ஆர் நிலாப்தீன் (வயது 20) குமாரசாமி அற்புதராசா (வயது 25) எனும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதிப் பத்திரத்திற்கு கால நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளினால் வாகனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வாகன அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான காலம் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்னர் அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான காலம் நாளையுடன் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## யானைகள் அட்டகாசம்

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மதுறு ஓயா ரெதிதென்னைப் பகுதியில் உள்ள நெல் வயல்கள் யானைகள் அட்டகாசத்தால் அழிவுறுகின்றன.

சில காலத்துக்கு முன்னர் வயலில் வேலை செய்தவர் ஒருவரும் யானை அடித்து மரணமானதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (29)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கடந்த ஏப்ரல்மாதம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில், மரத்தினால் செய்யப்பட்ட இயேசுநாதரின் தலையும், அதற்கான உடுப்பும் ஒரு பொலித்தீன் பையில் வைத்தபடி தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திரு. பெஞ்சமின், இல. 96, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கடிதமூலம் தெரிவிக்கும்படி அல்லது யாழ் பஸ் நிலையக் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன், இதற்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். R. 316

# பதவி விலகும்போ.வ.சபை ஊழியருக்கு உதவித்திட்டம்

(கொழும்பு)

சேவையிலிந்து விலகும் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் நன்மை கருதி புதிய திட்டம் ஒன்றை போக்குவரத்து அமைச்சு அமுல்செய்யவுள்ளது.

இதன்படி, இந்த ஊழியர்கள் பதவி விலகிய பின்னர் தனிப்பட்ட பஸ் சேவைகளை நடாத்த வழி வகுக்கப்படுகிறது.

இவர்கள் இதற்கான பஸ் வண்டியொன்றை வாங்குவதற்கு 75சதவீத வங்கிக் கடன் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் தனியார் பஸ்களை இறக்குமதி செய்ய அரசாங்கம்வழங்கும்சலுகைகளும் இவர்களுக்குக் கிடைக்கும்.

கணிசமான அளவு நட்டஈட்டு தொகையும் இவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அமைச்சர் விஜயபால மென்டிஸ் தெரிவித்தார்.

## பரிசளிப்புவிழா

வண்ணை ஸ்ரீகாமாட்சிஅம்பாள் ஆலய பூங்காவன உற்சவத்தின் போது ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி, விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நிலையத்தலைவர் திரு. து. விஜயகுமார் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தின் அனேக பாடசாலைகள் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

# ஒரு ஆதம்பாவாவைக் கொல்வதால் தமிழர்-முஸ்லிம் ஒற்றுமை அழியாது

(மட்டக்களப்பு)

ஒருஆதம்பாவாவைக்கொலை செய்து விட்டால் தமிழ்-முஸ்லிம் இன ஒற்றுமை படுகொலை செய்யப்பட்டுவிட்டது என அர்த்தமல்ல. தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை பேணிக் காக்கப்பட வேண்டியதாகும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் திரு, எஸ். கரிகாலன் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்திற்காகச் செயல்பட்டு வந்தவர் ஆதம்பாவா. அப்படியான ஒருவரைக் கொல்வதால், கொன்றவர்கள் நினைக்கக் கூடாது

இதுபோன்ற கோழைத்தனமான செயல்கள் ''கொலை'' வடிவத்தில் இடம்பெற்று வருகின்றன. ஒரு சிலரினால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் இத்தகைய செயல்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்குச் சிலர் முன்னர் எடுத்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே இக்கொலையும் இடம்பெற்றுள்ளது. மேலும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது இருக்க நாம் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

அன்னாரின் பணிக்கு நன்றி செலுத்தும் வகையில் நாம் சில நன்றிக்கடன்களைச் செய்யத் திட்டமிட்டுள்ளோம். (37)

# சேமித்தலின் அவசியத்தை அனைவரும் புரியவேண்டும்

(யாழ்ப்பாணம்)

கடன் பெறுவது மட்டுமே நோக்கமாயிராது பெற்ற கடனைப் பயன்படுத்தி தொழில் முயற்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டு, கடனை மீளச் செலுத்துவதன் மூலம் தொடர்ந்து பயிற்சிகளை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கும் இக்கடனை வழங்கபேருதவியாகஇருக்கும்

இவ்வாறு இலங்கை வங்கி வட பிராந்திய வங்கிமுகாமையாளர் திரு. கணேசலிங்கம் யாழ். கல்வித்திணைக்களத்தில் நடைபெற்ற சுயதொழிற் கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் உரையாற்றும் போது கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் ஒரேவிதமான தொழிலையே எல்லோரும் மேற்கொள்ளாது தமது திறமைக்கும், தமது பிரதேசத்திற்கும் பொருத்தமான தொழிலையே மேற்கொள்ளவேண்டும். அத்தோடு இத்தொழில் உள்ளோரின் அனுபவங்கள், உதவிகளைப் பெறும்போது தொழில் மேலும் வளமடையும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மோட்டார் பொறித்தொழில் போன்ற தொழிநுட்ப வேலைகளுக்கே நல்ல தொழில் வாய்ப்புஉண்டு எனவே அதிக வருவாய் தரக்கூடிய தொழிற்றுறைகளையே நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

யாழ்ப்பாண மக்களில் 25% க்கு மேற்பட்டவர்களுக்கு வங்கிக்கணக்கு இல்லை. சேமித்தலின் அவசியத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். சேமிப்புக்கணக்கை பாடசாலை மாணவர்கள் ஆரம்பிக்க பெற்றோர் உதவ வேண்டும். பாடசாலைக் கல்வியை முடித்து தொழில் செய்யும்சமயத்தில் இப்பணம் அவர்களுக்குப்பெரிதும் உதவியாயிருக்கும் என்றார்.

கடன் பெறுவதற்குரிய விதி

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.15, 6.15
8.00 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
8-00 9-30
Sungpa & Alanyen Naiyenna. Yuchein
in
**THE KILLER ELEPHANTS**
(Cinemascope Colour)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-30, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
(Fantastic Film, Suitable for Childrens)
**CRAZY JUNGL E ADVENTURES**
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30

## ஆலய முன்றலில் சீட்டிழுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவின் ஆதரவுடன் நடாத்தப்படும் மாபெரும் சீட்டிழுப்பு எதிர்வரும் 11-06-90 அன்று வற்றாப்பளை அம்பாள் ஆலய முன்றலில் நடாத்தப்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர் மேஜர் பசிலனின் நினைவாக அமைக்கப்படும் விளையாட்டரங்கு நிதிக்காக நடாத்தப்படும் இவ் அதிஷ்டலாபச் சீட்டின் பெறுமதி பத்து ரூபாவாகும்.

இதன் முடிவுகள் 13-6-90 ஈழநாதம் பத்திரிகையில் வெளிவரும்.

(58)

# 48 லட்சம் ரூபா வரை மீளச் செலுத்தப்படவில்லை

(வவுனியா)

வவுனியா சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தால் 88ஆம் ஆண்டு வவுனியா பகுதி கிராமங்களுக்கு வழங்கப்பட்ட கடனிலிருந்து சுமார் 48 இலட்சம் ரூபா பணம் மீளச் செலுத்தப்பட வில்லை.

இது மீளச் செலுத்தப்படும் பட்சத்தில் ஏனைய பல கிராமங்களுக்கும் கடன் வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் 108 கிராமங்களில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் இயங்கி வருகின்றன.

கிராம மக்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை உண்டாக்குவதற்கே மேற்படி கிளைகள் உருவாக்கப்பட்டன

ஆனால், மக்கள் கடனை பெறுவதற்காக மட்டுமென்று அர்த்தப்படுத்திக்கொண்டு முண்டியடிப்பது வருத்தமளிக்கிறது என்று இதோடு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரித்தார்.

இது பற்றிய போதிய அறிவு இல்லாமையே இதற்கான காரணம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(தி)

# சகல பாடசாலைகளிலும் பாடசாலைச் சபைகள்

(கொழும்பு)

சகல பாடசாலைகளிலும் பாடசாலை சபைகளை அமைக்க கல்வி அமைச்சு புதிய திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அப்பாடசாலை உள்ள பகுதி மக்களை சம்பந்தப்படுத்தும் வகையில் இந்தத்திட்டம் கொண்டுவரப்படுகிறது எனவும் அமைச்சர் கூறினார்.

இதில் ஆசிரியர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் அவற்றின் அதிகாரங்களும் படிப்படியாக அதிகரிக்கப்படும். அரசாங்கத்தால் மட்டும் பாடசாலைகளை முன்னேற்றுவது ஒரு எளிதான காரியம் அல்ல.

பாடசாலைகளுக்கு அருகில் உள்ளவர்கள் அதன் முன்னேற்றத்தில் அதிக பங்கும் கவனமும் செலுத்த வேண்டும். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## சொற்பொழிவு

(நெடுந்தீவு)

கிறிஸ்தவ தமிழ்த் தொண்டு என்னும் தலைப்பில் விசேட சொற்பொழிவு ஒன்றினை

இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் இதனை நிகழ்த்துவார்கள்.

(62)

# கிறிஸ்தவ சமயத்தை பரப்ப நாட்டுக்கூத்து உதவியது

(கொழும்புத்துறை)

''மன்னார், மாதோட்டம், யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பகுதிகளில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப கத்தோலிக்க மத குருமார், நாட்டுக்கூத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தினார்கள்.

இந்த நாட்டுக் கூத்தை, பாடிய கிராமியப் புலவோர்கள் வறுமை என்னும் அரக்

அறிமுக விழாவில் கவிஞர் தேவதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

''வித்துக்கள்'' நூலின் முதலாவது அறிமுகவிழா சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவ மன்றத்தால், கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. விழாவுக்கு மாணவ மன்றத் தலைவி செல்வி மீரா இராஜரெட்

## மின்னொளி கரப்பந்தாட்டம்

(விசேட நிருபர்)

ஸ்ரீலங்கா இராணுவத்தால் 1986 இல் மண்டை தீவில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் 4ஆம் ஆண்டின் நினைவாக குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக் கழக அனுசரணையுடன்

# பொலிஸார் படிப்படியாக

சூசையப்பர் விளையாட்டுக் கழக அனுசரணையுடன் குருநகர் சனசமூக நிலையம் மின்னொளியில் ஆறு பேர் கொண்ட விலக்கல் முறை (ஓவர் ேம்) கரப்பந்தாட்டப் போட்டிகளை நடத்த முன் வந்துள்ளது.

போட்டிகள் ஜூன் மாதம் 1 ஆம் திகதியில் இருந்து தின மும் மின்னொளியில் குருநகர் சனசமூக நிலையக்கரப் பந் தாட்ட மைதானத்தில் நடை பெறும்.

பாடிய கிராமியப் புலவோர் கள் வறுமை என்னும் அரக் கனின் பிடியிலிருந்து தப்பியே எமது தமிழீழத்தின் தேசியக் கலைகளில் ஒன்றாகிய நாட் டுக் கூத்தைப் பாடினார்கள்

அவர்கள் எமது தமிழீழ தேசியக் கலையைக் காத்த காவலர்கள், பாவலர்கள், நாவலர்கள் என்றால் மிகை யாகாது''

இவ்வாறு ''வித்துக்கள்', என்ற தனது தென்மோடி நாட்டுக் கூத்தின் முதலாவது

# மாடுகளை அறுப்பதற்கு நிந்தவூரில் மடுவம் இல்லை

(நிந்தாவூர்)

நிந்தாவூர்ப்பகுதியில் இறை ச்சிக்கென மாடுகளை அறுப்ப பதற்கு மடுவம் ஒன்று இல் லாதகுறை நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

மடுவம் ஒன்று இல்லாத காரணத்தால்கசாப்புக்கடைக் காரர்கள் வயல் வெளிகளிலும் வளவுகளிலும் மாடுகளை அறுத்து வருகின்றனர்.

இதனால் சுகாதாரச்சீர் கேடுகள் ஏற்படுவதுடன், இறைச்சிக்குத் தரமற்றமாடு களை அறுக்கவும் ஏதுவாக அமைந்துள்ள தெனப் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்ற னர்.

இது பற்றி பொமக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிந்தவூர்ப் பிரதேசப் பொறுப் பாளா. திரு. விக்ரமின் கவ னத்திற்கும் கொண்டுவந்துள் ளனர்.

மடுவம் ஒன்றை விரைவில அமைக்க நிந்தவூர் பிரதேச சபையும் நிந்தவூர் ஜீம்மா பள்ளி வாசல் நிருவாக சபை யினரும் ஆவன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் திரு. விக்ரம் வலியுறுத்தியுள் ளார். (53)

## 19 கிலோ தங்கம் பிடிபட்டது

(சென்னை)

சிங்கப்பூரில் இருந்துகடத்தி வரப்பட்ட பத்தொன்பதே கால் கிலோ எடையுள்ள தங் கத்தைசென்னையில் வைத்து சுங்கப பகுதியினர் கண்டு பிடித்தனர்.

அறுபத்தைந்து லட்சம் ரூபா பெறுமதியுள்ள இந்த தங்கசட்டிகள் ஆடைதயாரிக் கும் நிறுவனம் ஒன்றுக்கு வந்த கொள்கலன்களில்மறை த்து வைக்கப்பட்டிருந்தன.


## லண்டன் பரீட்சை

சர்வதேச கணக்குப் பதிவாளர்கள் நிறுவனம் (Institute of Book-Keepers). இன்ஸ்ரிற்றியூற் ஒவ் டேற்றா புறோசசிங் மனேஜ்மென்ற் (Institute of Data Processing Management) ஆகிய லண்டன் கல்வி நிறு வனங்களின் பரீட்சை,

**யூன் மாதம் 5, 6, 7, 8ஆம் திகதிகளில்**

மேற்படி ஸ்தாபன முகவர்களால், யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்கு வீதியிலுள்ள,

**ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் அட்மினிஸ்றேசனில் நடாத்தப்படும்.** (R/1046)


செல்வி மீரா இராஜரெட் ணம் தலைமை வகித்தார்.

விழாவுக்கு பிரதம கருத் துரை வழங்குபவராக ஆசனக் காவில் பங்குக்குரு வண. பிதா எஸ். கிலாறி ஜெபநே சன் அடிகள் கலந்து கொண் டார்.

கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத் துவக் கல்லூரி தவத்திரு தனி நாயகம் தமிழ் மன்றத்து குரு மாணவர்களால் 'வித்துக்கள்' நாட்டுக் கூத்தின் அங்கங்கள் 1, 8, 9, 15, என்பன நடித் துக் காண்பிக்கப்பட்டன.

அண்ணாவி வ. அல்பிறட் டால் ஆசிரியம் என்ற கலை வடிவம் பாடிக்காண்பிக்கப்பட் டன.

நன்றியுரையை உயர்தர வகுப்பு மாணவமன்றச் செய லாளர் செல்வி இராஜினி பாலசேகரம் ஆற்றினார். (24)

## ரூ. 4,000கொடுப்பனவு அதிருப்தி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் ஊழல், மோசடிகள் காரணமாக இடைநிறுத்தப் பட்டிருந்த ரூபா 4000/- புனர் வாழ்வு நிவாரணக் கொடுப் பனவு மீண்டும் ஆரம்பிக்கப் படாத நிலை குறித்து பொது மக்கள் அதிருப்தி தெரிவிக் கிறார்கள்.

இந்நிவாரணம் பெறத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு, குடும்ப அட் டைகள் வழங்கப்பட்டு பல மாதங்களாகிவிட்டன.

ஒரு சிலருக்கு இதுவரை அந்நிவாரண அட்டைகள்கூட இதுவரை வழங்கப்பட வில்லை.

ரூபா 4000/- பெற பல தடவைகள் அலைகின்றோம். அலைச்சல் தான் மிச்சம், பயனில்லை. இந்நிலையில் தொழில் மீள ஆரம்பிக்க முடியுமா?

வாகரை நடமாடும் செய லகம் மூலம் அப்பகுதி மக்க ளுக்கு இக்கொடுப்பனவு வழங் கப்பட்டது.

வெல்லாவெளிப் பகுதி யிலும் நடமாடும் செயலகம் மூலம் வழங்கப்படவுள்ளதாம் அப்படியானால் நடமாடும் செயலகம் வரும் வரை காத் திருக்க வேண்டுமா? என்ற கேள்வி ஏனைய பிரிவுகளில் எழுந்துள்ளது.

## விலகிச் செல்கின்றனா

(வவுனியா)

வவுனியா நகரசபை கட்ட டத்தில் தங்கியுள்ள பொலி ஸார் படிப்படியாக விலகி வேறு பகுதிகளுக்குச் செல் வதை அடுத்து, நகரசபை நிர் வாகம்மேற்படி கட்டடத்தின் பகுதிகளை கொஞ்சம் கொஞ் சமாகப் பொறுப்பேற்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

பொலிஸ்உயர் அதிகாரி ஒரு வரினால் இப்படிக் கேட்கப் பட்டுள்ளதாக நகரசபை வட் டாரங்கள் தெரிவித்தன.

சுமார் ஆறுவருடங்களாக நகரசபைக்குரிய இக்கட்டடத் தில் பொலிசார் தங்கி வருகின் றனர்.

ஆரம்பத்தில் இராணுவத்தி னரும், பின்னர் பொலிஸாரும் நகரசபைக் கட்டடத்தில் தங் கியிருந்ததையடுத்து நகரசபை நிர்வாகம் வேறொரு பகுதிக்கு மாற்றப்பட்டது.

வசதியற்ற இடத்தில் மேற் படி நிர்வாகம் இயங்கி வருவ தனால், பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதா கவும், ஒழுங்கான சேவை களை மேற்கொள்ள முடியா மல் இருப்பதாகவும் நகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித் தார். (தி)

## புதிய நிர்வாகிகள்

(வடமராட்சி)

வல்வை கிராம மட்ட கடற் றொழில் அபிவிருத்தி அமைப்பு புதிய உத்தியோகத் தர் தெரிவு வல்வையிலுள்ள அதன் தலைமைக் காரியால யத்தில் நடைபெற்றது.

தெரிவானோர் விபரம் பின் வருமாறு;

தலைவர்: திரு ந. வைத்தி லிங்கம், செயலாளர்: திரு. எஸ். இந்திரதாஸ், பொருளா ளர்: திரு. எஸ். சிவஞானசுந் தரம், உப தலைவர்: திரு சி. கணேசலிங்கம்; உப செய லாளர் திரு. பி. சர்வதமன் னன் ஆகியோருடன் செயற்குழு உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# மகளிர் பாடசாலையை தேசிய தரத்திற்கு உயர்த்தவும்

''பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி தேசிய பாடசாலை கள் தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்''

மேற்படி கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்தில் பெற்றோ ரால் இவ்வாறான ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

தேசிய பாடசாலைகள் நகர்ப்புறத்திற்குள் இருக்க வேண்டும் என்ற நியதிஇல்லை இன்றைய அரசின், எங்கும் ஒரே கல்வி, கிராமப்புற மாணவருக்கும் சமகல்வி வாய்ப்பு என்ற கோட்பாட் டிற்கமைய எமது பாடசாலை தேசிய தரத்திற்கு உயர்த்தப் படவேண்டும்என்றகோரிக்கை மகஜராக சம்பந்தப்பட்டவர் களுக்கு அனுப்பப்படவுள்ளன

இடவசதி, போக்குவரத்து வசதி, விடுதி கொண்டதாக ஒரு முக்கிய நிலையில், பண் டத்தரிப்பு மகளிர் கல்லூரி அமைந்துள்ளதும் இங்கு தெரி விக்கப்பட்டது.

பாடசாலை அபிவிருத்திக்கு அயலில் அதிக காணிகள் உள் ளன. அரசாங்கம் மூலம் பெறு மதி கொடுத்துஅக்காணிகளை வாங்கக் கூடிடதாகவுள்ளன.

## சாவ. சங்கானை பஸ்சேவை ஒழுங்கில்லை

சங்கானை சாவகச்சேரி 775 ஆம் இலக்க பஸ்சேவை ஒழுங்காக நடைபெறாததால் பொதுமக்கள், விவசாயிகள், வியாபாரிகள் பெரும் பாதிப் படைகின்றனர்.

சீரற்ற இந்த சேவையால் விவசாயிகள் தமது விவசாய உற்பத்தி களை சுன்னாகம் சந்தைக்கு கொண்டு சென்று விற்கவோ பொதுமக்கள் சுன்னாகத்தில் பொருட்களை வாங்கிக் கொண்டு வரவோ முடியாது உள்ளனர்.

அத்துடன் கொழும்பு செல் லும் பிரயாணிகள் சுன்னாகம் புகையிரத நிலையம் செல்ல முடியாதும் தவிக்கின்றனர்.

882 ஆம் இலக்க காரைநகர் யாழ்ப்பாணம் பஸ் சேவையும் ஒழுங்காக ஓடுவதில்லை.

இதனால்காரைநகர் மக்கள் மட்டுமல்ல ஆறுமடம் மட்டு முனை மக்கள் பிரயாணம் செய்ய பெரும் கஷ்டப்படு கின்றனர்.

கடன் பெறுவதற்குரிய விதி முறைகளை ... வழங்கல் பொறுப்பதிகாரி திரு. பாலசுப்பிரமணியம் கூறுகையில் ''கடன் பெறுப வர் தெரிவு செய்த தொழி லைத் தொடர்ந்து நடாத்தும் ஆற்றல் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். மூலப் பொருள் கிடைக்குமிடம், சந் தைப்படுத்தும் வசதி என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் ஆகும்.

இக்கடன் பெறுபவர்கள் கட்டாயமாக சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும் இவர்களின் நன் மைக்காக 500/= செலுத்தி ஆரம்பிக்க வேண்டிய சேமிப் புக்கணக்கை 100/= மட்டுமே செலுத்தி ஆரம்பிக்க விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கல்வித்திணைக் கள அதிகாரியொருவரின் சிபாரிசுடன் இருவர் பிணை நிற்கவேண்டும். பிணைநிற்பவ ரில் ஒருவர் 50 வயதிற்குட் பட்ட அவரது குடும்ப அங்கத் தவராகவும் இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முறைசா ராக்கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம், வெளிக்கள உத்தியோகஸ்தர் திரு. பால கிருஸ்ணன் ஆகியோரும் நூற் றுக்கணக்கான மாணவர்க ளும் கலந்து கொண்டனர்.

கடன் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களும் இங்கு வழங்கப்பட்டன. இக் கூட்டத்திற்கு சமூகமளிக்காத வர்கள் விண்ணப்பப் படிவங் களைப் பெற்று அவற்றை நிரப்பி தம்மிடம் ஒப்படைக்கு மாறு கல்வி அதிகாரி எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

## நினைவு அஞ்சலி

சமாதான சைக்கிள் பவனி யின்போது விபத்து மரணம் அடைந்த நாகமுத்து நற் குணத்தின் நினைவு அஞ்சலிக் கூட்டம் பளை மகாவித்தி யாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

நினைவுமலர் ஒன்றும் வெளி யிடப்பட்டது. இந்த நினைவு மலர் 22ஆம் திகதி ஜனாதி பதி பிரேமதாஸவிடம் வழங் கப்பட்டதும் குறிப்பிடத்தக் கது.


தினசரி 4.00, 6.30, 9.30
சனி, ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது.

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10 30, 2 30, 630, 9 30
விஜயகாந், ரேகா,
செந்தில்
நடித்த
**சொல்வதெல்லாம் உண்மை**
B 878

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
**ஊர்க்காவலன்**
50-வது நாளை நோக்கி

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7·00, 9·45
Terence Hill Bud Spence
**I AM FOR THE HIPPOPOTAMUS**

# ரஷ்ய கூட்டமைப்பின் தலைவராக எல்சின் தெரிவு கொர்ப. நெருக்கடி!

(மொஸ்கோ)

சோவியத் குடியரசின் ரஷ்ய கூட்டமைப்பின் தலைவராக பழைய கோட்பாட்டின் கம்யூனிச அரசியல்தலைவர் எல்சின் தெரிவு செய்யப் பட்டிருக்கிறார்.

இத்தேர்தல் சோவியத் பாராளுமன்றத்தில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. 535 வாக்குகளைப் பெற்று பெரும் பான்மைக்கு மேலும் நான்கு வாக்கினை அதிகமாகப் பெற்று வெற்றியடைந்துள்ளார்.

சோவியத் தலைமைப்பீடத்தின் ஆதரவுடன் இத்தேர்தலில் போட்டியிட்ட ரஷ்ய பிரதம மந்திரி அலெக்சாண்டர் மிலாஸ்ரோ தோல்வி கண்டார்.

இவரின் இவ்வெற்றியானது சோவியத் ஜனாதிபதி கொர்பசேவிற்கு மேலும் பல நெருக்கடிகளை கொடுக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எல்சின் பாராளுமன்றத்தில் பேசும் போது ரஷ்யாவை மாற்றி அமைப்பது தமது பணிகளில் முக்கியமானது என்று குறிப்பிட்டார்.

தற்போதைய ஜனாதிபதி கொர்பசேவை விட சோவியத்யூனியனில் அதியுயர் தலைமைப் பீடத்திற்கு எல்சின் தகுதியானவர் என்று பகிரங்கமாக பிரகடனம் செய்வதற்கு இத்தேர்தலின் வெற்றி உதவியிருக்கிறது என்று சோவியத் அரசியல் தலைவர்கள் கருதுகிறார்கள்.

இத்தேர்தல் வெற்றியானது ஜனாதிபதி கொர்பசேவிற்கு உள்நாட்டு ரீதியாக மேலும் நெருக்கடிகளை தருவதாக இருக்கிறது.

உள்நாட்டில் அரசியல் பொருளாதார ரீதியாக பிரச்சினைப் பட்டு வரும் கொர்பசேவிற்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

பொருளாதார ரீதியாக கொண்டு வரப்பட்ட மறுசீரமைப்பு முறை பால்டிக் குடியரசுகளின் சுதந்திரப் பிரகடனம் விலை வாசிகளின் ஏற்றம் கம்யூனிச பழமைவாதிகளின் பிரசாரம் போன்றவை இவருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வந்தன.

இவ்வாறாக உள்நாட்டில் பெரும் நெருக்கடி நிலவும் வேளையில் ஜனாதிபதி கொர்பசேவ் வாஷிங்டன் சென்றிருக்கிறார்.

வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்சுடன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களின் குறைப்புப் பற்றியும், தொலைதூர ஏவுகணைகளின் குறைப்புப் பற்றியும் பேச்சு வார்த்தை நடைபெறும்.

இதற்கு முன்னதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேகர் சோவியத் ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தினர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## தென் ஆபிரிக்கப்படைக்கும் கெரில்லாக்களுக்கும் உடன்பாடு சாத்தியப்படாது

(ஜோகன்னர்ஸ்பேர்க்)

தென் ஆபிரிக்க பாதுகாப்புப் படைகளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கெரில்லாக்களும் இணைவது சாத்தியப்படாது என்று தென்ஆபிரிக்காவின்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் முலான் கூறியதாக தென் ஆபிரிக்க வானொலி அறிவித்துள்ளது.

சாம்பியாவின் தலைநகரமான லுசாக்காவில் இளைப்பாறிய தென் ஆபிரிக்கப் படை வீரர்களும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இராணுவப் பிரிவினரும் இணைந்து நடாத்திய மகாநாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் முலான் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

ஜெனரல் முலான் மேற்படி மகாநாட்டின் முடிவுகள் பற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இத்தகைய ஒரு முடிவுக்கு வருவதற்கு மகாநாட்டுக்கு அதிகாரமில்லை என்றும், மகாநாட்டுப்பிரதிநிதிகள் சிலருக்கும் தென்ஆபிரிக்கப் பாதுகாப்புப் படைக்கும் எவ்வித மான தொடர்பும் இல்லை என்றார்.

முன்னாள் தென் ஆபிரிக்க விமானப்படைத் தளபதி வில்லிபிளாக், கேர்ணல் கபிரியேல் உட்பட 50 தென் ஆபிரிக்கப் பிரதிநிதிகள் கடந்த ஞாயிறன்று கூடிய மகாநாட்டில் தென் ஆபிரிக்கப் பாதுகாப்புப் படைகளும், ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் இராணுவமும் இணைவதென்று முடிவெடுக்கப்பட்டது.

தென் ஆபிரிக்காவைப் பாதுகாப்பதற்கு அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் உள்ளனவென்றும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதித் தலைவர்கள் நெல்சன் மண்டேலாவால் ஆதரவுடன் ஆயுதப் போராட்டம் நடாத்தும் புரட்சி அமைப்புக்கும் தமக்கும் தொடர்பு கிடையாது என்றார்.

## ஒரு வாரத்தில் கிடைக்கும்

(மட்டக்களப்பு)

வாகரை நடமாடும் செயலகத்தில்பிறப்பு, இறப்பு, விவாக பதிவு சான்றிதழ் பிரதிகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பித்தவர்களுக்கான சான்றிதழ்கள்ஒரு வாரகாலத்திற்குள் அனுப்பி வைக்கப்பட்டன.

இத் தகவலை மாவட்டபதிவாளர் திரு.இ. முத்துக்குமாரன் தெரிவித்தார். (37)

## அமெரிக்காமீது பொருளாதார தடை ஈராக் வேண்டுகோள்

(பாக்தாத்)

இஸ்ரேலுக்கு ஆதரவு அளிப்பதற்காக அமெரிக்கா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசையின் கேட்டுள்ளார்.

இதனை பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான யாசிர் அரபாத்தும் வேறு அரபு நாடுகளின் தலைவர்களும் ஆதரவு தெரிவித்து ஆமோதித்துள்ளனர்.

பாக்தாத்தில் நடைபெறும் அரபு உச்சிமாநாட்டின் இரண்டாவது கூட்டத்தொடரில் பேசிய ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைன் இவ் வேண்டுகோளை விடுத்தார்.

இவரைத் தொடர்ந்து பேசிய யாசிர் அரபாத் அவரது வேண்டுகோளை ஆதரித்த அதேவேளையில் அரபுப் பிரதேசங்களை ஆக்கிரமித்து வரும் நாடுகள் அமைப்புகள் நிறுவனங்கள் மீது அரசியல் மற்றும் தார்மீக நெருக்கடிகளை செய்து பொருளாதார தடைவிதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சூடானிய ஜனாதிபதி ஓமான் சசன் பஷீரும் சோமாலிய ஜனாதிபதி மொகமட் சையதுவும் இஸ்ரேலுக்கான அமெரிக்க ஆதரவை கண்டனம் செய்தனர்.

## இரு பிரிட்டிஸ் சிப்பாய்கள் நெதர்லாந்தில் சுட்டுக்கொலை

(அம்ஸ்ரர்டேம்)

மேற்கு ஜேர்மனியில் நிலை கொண்டிருக்கும் பிரிட்டிஷ் இராணுவப் பிரிவைச் சேர்ந்த இரு சிப்பாய்கள் ஞாயிறன்று கடமையில் ஈடுபடாத நேரத்தில் ஜேர்மனியின் எல்லைப்புறத்திற்கு அருகாமையில் உள்ள நெதர்லாந்தைச் சேர்ந்த றொப்வர்மண்ட் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நகரில் ஒரு இரவைக் கழித்துவிட்டு காலையில் காரில் ஏறிய சமயம் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## அணைக் கட்டு வேலைகள்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறையில் இலந்தைக்குளத்தை சுற்றி அணைக் கட்டு கட்டுவதற்காக யாழ். மாநகராட்சி மன்றம் எடுத்த நடவடிக்கையால் இப்பொழுது மண் என்பன வந்துள்ளன.

இதற்கான புனரமைப்பு வேலைகள் மிகவிரைவில் ஆரம்பமாகும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மணிலா பேச்சுவார்த்தைகள் தேக்க நிலை

(மணிலா)

பிலிப்பைன்சிலுள்ள அமெரிக்கத் தளங்கள் சம்பந்தப் பட்டஅமெரிக்க பிலிப்பைன்ஸ் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளன.

பிலிப்பைன்சில் அமெரிக்க இராணுவத் தள வசதிகளுக்கான நஷ்டஈடு பற்றிய வாக்குறுதியை அமெரிக்கா நிறைவேற்றவில்லை என பிலிப்பைன்ஸ் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இந்த ஆண்டு மணிலாவிற்கான அமெரிக்க உதவியை 222.5 மில்லியன் டாலர்களால் குறைத்துள்ளது. இச்செயல் அமெரிக்க இராணுவத்தளங்கள் பற்றிய ஒருபுதிய ஒப்பந்தத்திற்கான வாய்ப்பினைக் குறைத்துள்ளது என பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் அமெரிக்கா இக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளது. இரு தரப்பினரும் தங்கள் நிலைகளில் பிடிவாதமாக உள்ளனர் என அமெரிக்கப்பிரதிநிதி கூறியுள்ளார்.

மேலும் இந்தப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் அமெரிக்காவுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்துவது சாத்தியமல்லஎன பிலிப்பைன்ஸ் பிரதிநிதி கூறினார்.

## முதலுதவிப் பயிற்சி

(இயக்கச்சி)

இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் எதிர் வரும் திங்கட்கிழமை முதலுதவி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

இதில் சேர விரும்பும் பச்சிலைப்பகுதி மாணவமாணவிகள் திங்கட் கிழமை தொடக்கம் சேர்ந்து கொள்ளலாம் என இயக்கச்சிப் பொறுப்பாளர் திரு சுமன் தெரிவிக்கின்றார். (43)

## கண்ணீர் சொரியும் அழுமூஞ்சி மரம்

கி. பி. 15ஆம் நூற்றாண்டில் தென் அமெரிக்காவின் அமேசன், ஓரினாக்கோ பள்ளத்தாக்குகளில் காணப்பட்ட 'ஹேவேயா' எனப்படும் ஒரு வகை மரத்தின் மேற்பட்டைகளைத் துளைத்து அதிலிருந்து வரும் பாலைச் சேகரித்து அதை நெருப்பில் உலரவைத்து அது இறுகும்போது அதைப்

இந்த 'அழுமூஞ்சி மரம்' சுமார் முந்நூறு ஆண்டுகள் வரை ஒரு விந்தைப் பொருளாகவே இருந்தது. இரசாயன அறிஞரின் கவனத்திற்கு வந்த பின்னர்தான் இம்மரத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

இந்த மரத்தையே ஐரோப்பியர் ரப்பர் என அழைத்



## சந்தைக்கு வந்துவிட்ட "கொர்பி"க்கு சமாதானப்பரிசு!

உலகின் முதன் முதலாக மார்க்ஸிஸ சோஷலிஸத்தை 1917ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியினைத் தொடர்ந்து லெனின் சோவியத் ரஷ்யாவில் நடைமுறைப்படுத்தினார். அதைத் தொடர்ந்து இந்நாடு ஏனைய சனநாயக முதலாளித்துவ நாடுகளுக்கு ஓர் இரும்

சோவியத் ஜனாதிபதி மிக்கொயில் கொர்பசேவின் பெயரை சுவிட்சலாந்தில் உள்ள சிகரெட் கம்பனி தனது சிகரெட்டுக்கு சூட்டியுள்ளது. தற்பொழுது சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ள 'கொர்பி சிகரெட் சுதந்திரத்தின் சுவை தரும் சிகரெட்' என விளம்பரம் செய்யப்படுகின்றது.

வாசக நேயர்களுக்கு ....

# அழுமூஞ்சி மரம்

கி. பி. 15ஆம் நூற்றாண்டில் தென் அமெரிக்காவின் அமேசன், ஒரினாக்கோ பள்ளத்தாக்குகளில் காணப்பட்ட 'ஹவேயா' எனப்படும் ஒரு வகை மரத்தின் மேற்பட்டைகளைத் துளைத்து அதிலிருந்து வரும் பாலைச் சேகரித்து அதை நெருப்பில் உலரவைத்து அது இறுகும்போது அதைப் பந்துபோல் உருட்டி அப் பந்தை தென் அமெரிக்கப் பழங்குடி மக்கள் விளையாடி வந்தார்கள்.

கிறிஸ்தோபர் கொலம்பஸ், அமெரிக்க வெஸ்புச்சி ஆகியோரின் பயணங்களின் பின்னர் ஸ்பானிய தேசத்தவர்கள் தென் அமெரிக்காவுக்கு செல்வதற்கான வழிகளை கண்டறிந்து அதனை ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

தென் அமெரிக்க பூர்வீகக்குடி மக்களின் பந்து விளையாட்டு ஸ்பானியர்களின் மனதைக் கவர்ந்தது. இதனால் அப் பந்தைச் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட மரத்தின் பெயரை அறிவதில் கவனம் செலுத்தினர்.

பட்டையை இலேசாக வெட்டிய பின அம்மரத்திலிருந்து நெடுநேரம் பால்வடிவதனால் தான் தென் அமெரிக்க பழங்குடி மக்கள் அந்த மரத்தை 'அழுமூஞ்சி மரம்' என அழைத்தனர்.

இந்த 'அழுமூஞ்சி மரம்' சுமார் முந்நூறு ஆண்டுகள் வரை ஒரு விந்தைப் பொருளாகவே இருந்தது. இரசாயன அறிஞனின் கவனத்திற்கு வந்த பின்னர்தான் இம்மரத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

இந்த மரத்தையே ஐரோப்பியர் ரப்பர் என அழைத்தனர். 50 வகையான தாவரங்களில் இருந்து ரப்பர் பால் எடுக்கப்படுகின்றது.

ரப்பரின் தேவைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து அமேசன் நதியின் காட்டுப் பகுதிகளில் காணப்பட்ட அபாயங்களையும் பொருட்படுத்தாது ரப்பர் பால் கண்டபடி சேகரிக்கப்பட்டதனால் இத்தாவரம் அழிந்துபோகும் நிலை உருவாகியது.

அமேசன் ஆற்றுப்பள்ளத்தாக்கின் இயற்கையான ரப்பர் மரங்களின் பல்லாயிரக்கணக்கான ரப்பர் விதைகளை 'விக்ரம்' என்ற ஆங்கிலேயர் ரகசியமாகச் சேகரித்து தமது தாய்நாட்டுக்குக் கொண்டு சென்று, விதைத்து வளர்ந்த சிறியநாற்றுக்களை இலங்கை, மலேசியா, கிழக்கிந்திய தீவுகள் ஆகிய நாடுகளுக்குக் கொண்டுவந்து ரப்பர் மரங்களை உண்டாக்கி பெருந்தோட்டங்கள் உருவாக வழிகாட்டினார்.

இரண்டாம் உலகப்போரின் போது, யப்பானியர் தென் கிழக்காசிய நாடுகள் பலவற்றைக் கைப்பற்றியமைக்கு பிரதான காரணம் அங்கு காணப்பட்ட ரப்பர் மரங்களே ஆகும்.

ரப்பர் பால் பல தாவரங்களில் இருந்து பெறப்பட்டாலும் 'ஹெவியா' தாவரம் தரும் ரப்பர் பாலே தரமானதாகும். 'ஹெவியா' மரத்தில் இருந்தே உலக ரப்பர் உற்பத்தியில் 95 சதவீதம் பெறப்படுகின்றது.



தமிழீழத்தின் பல பாகங்களிலும் தேனிசைச் செல்லப்பா குழுவினரின் இசைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. சாவகச்சேரியில் நடந்த நிகழ்ச்சியில் கித்தார் வாசித்த இளைஞனுக்கு பொறுப்பாளர்குணாபுலிச்சின்ன மோதிரம் அணிவித்துக் கௌரவித்தபோது எடுத்த படம்

# கத்தரிக்காய் அல்ல, நீங்கள் தான் எனக்கு ராஜா

அன்று ஒருநாள் என்றுமே அசைவ உணவு உண்ணும் முகலாய அரசர் அக்பரும், பீர்பாலும் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொண்டார்கள் அப்பொழுது அவர்களுக்குகத்தரிக்காய்ப்பொரியல்பரிமாறப் பட்டது. அக்பர், பீர்பாலிடம் ''கத்தரிக்காய் சாப்பிடுவது உடம்புக்கு நல்லதா? ''எனக் கேட்டார். அதற்கு பீர்பால் ''ஆம்அரசரே! கத்தரிக்காய் சாப்பிடுவது நல்லது தான்'' எனக் கூறினார்.

இன்னொரு நாள் அக்பரும் பீர்பாலும் இதே போல ஒன்றாக அமர்ந்து சாப்பிட்ட போது மீண்டும் கத்தரிக்காய்ப் பொரியல் பரிமாறப்பட்டது அச்சமயம் அக்பர் பீர்பாலிடம் ''கத்தரிக்காய் சாப்பிடுவது உடம்புக்கு நல்லதில்லையாமே என்று சொல்ல பீர்பாலும்'' ஆம் அரசரே ! கத்தரிக்காய் சாப்பிடுவது உடம்புக்கு நல்லது' அல்லஎன்றுகூறினார்.

உடன்னேஅக்பர்'' கத்தரிக்காய் சாப்பிடுவது உடம்புக்கு நல்லது என்று சொன்னேன், நீயும் ''ஆமாம்நல்லது என்று சொன்னாயே'' எனக் கேட்டார்.

அதற்கு பீர்பால் எனக்கு ராஜா நீங்கள் தானே! கத்தரிக்காய் அல்லவே! எனக் கூறினான்.

# மணல் பாட்டுப் பாடுகின்றது

வட அமெரிக்காவில் உள்ள கொலறாடோ காடுகளில் ஒருவகை அற்புதமான மணல் காணப்படுகின்றது. இக் காடுகளில் காற்று வீசும் வேளையில் இம்மணல்கள் பறவைகள் பாடுவதைப்போல கீச்சுக் கீச்சென்று ஒலி எழுப்புகின்றன.

இம் மணலை ஒரு பையில் போட்டு அசைத்தால் நிஜமாக நாய் குரைப்பது போன்ற சப்தம் ஏற்படுகின்றது.

நமது இரண்டு கைகளுக்கும் நடுவில் அந்த மணலை வைத்துக்கொண்டு தட்டும் போது ஆந்தைகள் அலறுவது போன்ற குரல் ஒலி ஏற்படுகின்றது.

இம் மணலை நுட்பமான கண்ணாடியினால் பரிசோதித்து பார்த்தபோது அவை உருண்டை வடிவமுடையதாகக் காணப்பட்டது. இம்மணலை ஒரு வகைக் காற்று மூடியுள்ளதாகவும்: அக்காற்று அசைவதனால்தான் இவ்வாறு பல்வேறுபட்ட ஓசைகள் கேட்பதாயும் அம்மணலைப்பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

# "ஓசி" என்ற சொல்?

நாம் பொதுவாக பணம் எதுவும் செலுத்தாமல் நமது முயற்சியினால் இலவசமாகப் பெறக் கூடியதையே ஓசியில் கிடைத்தது. எனக் கூறுவது வழக்கமாகும்.

'ஓசி' என்ற சொல்லுக்கு தமிழ் அகராதியில் எதுவித விளக்கமும் கிடையாது இச் சொல் தமிழ் அகராதியில் இல்லை.

உத்தியோக பூர்வமான கடிதங்களை அரசுக் கடிதம் எனக் காட்டுவதற்காக ''அரசுப்பணி'' என்ற முத்திரை இடப்படுகின்றது.

ஆங்கிலேயர் இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளை அடிமைப்படுத்தி வைத்திருந்த காலத்தில் ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கம்பனி ஆட்சி செய்த போது அவர்கள் அனுப்பும் அஞ்சல் கடிதங்களில் O. C. S என்ற முத்திரையினைப் பொறித்தனர் On Company Service என்பதன் சுருக்கவே O.C S ஆகும்.

O. C. S என்ற அடையாளம் இடப்பட்ட தபால்கள் முத்திரை ஒட்டப்படாது எங்கும் சென்றமையினால் ஓசியில் போகின்றது என்று அழைத்தனர் இதுவே நாளடைவில் சும்மா கிடைக்கும் எல்லாம் ஓசி'யாகி விட்டது.

# "கொர்பி"க்கு சமாதானப்பரிசு!

உலகின் முதன் முதலாக மார்க்ஸிஸ சோஷலிஸத்தை 1917ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியினைத் தொடர்ந்து லெனின் சோவியத் ரஷ்யாவில் நடைமுறைப்படுத்தினார் அதைத் தொடர்ந்து இந்நாடு ஏனைய சனநாயக முதலாளித்துவ நாடுகளுக்கு ஓர் இரும்புத்திரை நாடாகவே காட்சி அளித்தது.

ஆனால் தற்போதைய சோவியத் நாட்டின் ஜனாதிபதி அந்த இரும்புத்திரையினைக் கிழித்து சோவியத் நாட்டினை பகிரங்கச் சந்தைக்கு அழைத்துவர பெரும் பாடுபட்டு வருகின்றார்.

இவர் ''பெறெஸ்ட்ரொய்கா''(மறுசீரமைப்பு) ''கிளாஸ்நொஸ்ற்'' (ஒளிவு மறைவின்மை), ''டெமோக்ரரி ஸட்ஸியா'' (ஜயநாயகமயப்படுத்தல்) போன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளார், அத்துடன் உலகில் கெடுபிடி யுத்தங்களில் இருந்து நீங்கிக் கொள்பவர் போலவும் காட்சி அளிப்பதனால் கடந்த ஆண்டு இவருக்கு உலக சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படலாம் எனவும் எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் மறைந்து வாழும் திபெத்திய தலைவர் தலாய் லாமாவுக்கு உலக சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

எதிர்பாராத விதமாக 1991ஆம் ஆண்டுக்குரிய மார்ட்டின் லூதர் கிங் (ஜுனியர்) சமாதானப் பரிசு சோவியத் ஜனாதிபதி மிக்செயில் கொர்பசேவுக்கு வழங்கப்படவுள்ளது.

ஏதோ ஒரு வகையில் உலக சமாதானப் பரிசைப் பெறப் போகும் கொர்பசேவ் சந்தையில் விற்பனைக்கும் வந்து விட்டார். தனது நாட்டை சந்தைப்பொருளாதார முறைக்கு ஓரளவு மாற்றியமைத்து வரும் இவர் தனது முயற்சி நிறைவேறமுன் சந்தைப் பொருளாக விற்பனைக்கு வந்துவிட்டமை ஆச்சரியமாகவே உள்ளது.

சோவியத் ஜனாதிபதி மிக்கொயில் கொர்பசேவின் பெயரை சுவிட்சலாந்தில் உள்ள சிகரெட் கம்பனி தனது சிகரெட்டுக்கு சூட்டியுள்ளது. தற்பொழுது சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ள 'கொர்பி சிகரெட் சுதந்திரத்தின் சுவை தரும் சிகரெட் என விளம்பரம் செய்யப்படுகின்றது.

## வாசக நேயர்களுக்கு....

'ஈழநாதம்' வெறும் செய்திப் பத்திரிகையாக மட்டுமல்ல, மாணவர்களுக்கும் மற்றும் சாதாரண பொதுமக்களுக்கும்பயனுள்ள,சுவையானபகுதிகளையும் தினமும் தருவது தெரிந்ததே. தினமும் வெளிவரும் விசேஷபகுதிகள்பற்றிய விபரம் இங்கேதரப்படுகின்றது.

| | |
|---|---|
| சனி<br>ஞாயிறு | - சத்தீஸ்'மாஸ்'ரரின் A/L இரசாயனம் |
| திங்கள் | - சமூகத்தைப்பாதிக்கும் பிரச்சினைகள் |
| செவ்வாய் | - A/L இரசாயனம் வினாவிடைகள் |
| புதன் | - விளையாட்டுப்பகுதி |
| வியாழன் | - கதம்பமாலை |
| வெள்ளி | - மஞ்சரி |

# கதம்பமாலை

## "யாழ்ராஜ்"

## ஆங்கில அகராதி திரைக்கு வரும்

ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியின் முதலாவது பதிப்பு பிரசுரிக்கப்படுவதற்கு எழுபது ஆண்டுகள் எடுத்தன. ஆனால் இன்று அந்த அகராதியின் இரண்டாம் பதிப்பை வெளியிடுவதற்கு ஆக ஐந்து வருடங்கள் மட்டுமே எடுத்துள்ளன. இத்துரித வெளியீட்டுக்கு கம்பியூட்டரே உதவியுள்ளது.

தற்பொழுது வெளியாகியுள்ள ஆங்கில அகராதி 22000 பக்கங்களைக் கொண்டுள்ளது; 60 இலட்சம் சொற்களும், 24 இலட்சம் மேற்கோள்களும், ஐந்து லட்சம் விளக்கங்களும் காணப்படுகின்றன.

புத்தக வடிவில் வெளியிடப்பட்டிருக்கும் அகராதி 1991இல் கம்பியூட்டர் மயப்படுததப்பட்டதாக வெளிவரவுள்ளது.

இதற்காக IBM கம்பியூட்டர் கம்பனி 13 லட்சம் பவுண்கள் பெறுமதியான கம்பியூட்டர் பாகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. பிரித்தானிய நாட்டு அரசாங்கம் 289000 பவுண் ஸ்ரேலிங் பணத்தை மானியமாக உதவியுள்ளது. மேலும் கனடா அரசு 13 இலட்சம் பெறுமதியான கம்பியூட்டர் மென்பாகங்களை வழங்கியுள்ளது.

வாட்டர்லூ பல்கலைக் கழகம் எழுத்துக்களை வடிவமைத்துக் கொடுத்துள்ளது. 3.5 கோடி எழுத்துக்களைக் கொண்ட தரவுப் பதிவானது சர்வதேச கணனிப் பதிவு எனும் சபையினால் ஆக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டில் ஆங்கில அகராதிகம்பியூட்டரை வெளியிடுவதற்காக ஒக்ஸ்போட் பல்கலைக் கழகம் ஒரு கணனிப்பதிப்பை தயாரித்துக்கொண்டிருக்கின்றது.

## சைக்கிள் லைசன்ஸ் ஸ்தலத்தில் விநியோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை எடுத்த திடீர் நடவடிக்கை யால் இரு நாட்களில் சைக்கிள் அனுமதிப்பத்திரம் (லைசன்ஸ்) மூலம் எண்ணாயிரத்து எண் ணூறு ரூபா வரை அறவிடப் பட்டுள்ளது.

சைக்கிள் லைசன்ஸ் பெறு வது குறித்து மாநகர சபை பொதுமக்களுக்கு பலதடவை கள் அறிவித்திருந்தது. ஆனால் சைக்கிள் காரர் அதனை உதா சீனம் செய்து வந்தனர்.

இதனையடுத்து கோட்டை முனைப் பாலத்தில் வைத்து வீதியால் சென்ற சைக்கிள்கள் திடீர் பரிசோதனை செய்யப் பட்டது.

இதனால் லைசன்ஸ் இல் லாத சுமார் ஆயிரத்து எழு நூறு சைக்கிள்களுக்கு அந்த இடத்தில் வைத்து லைசன்ஸ் வழங்கப்பட்டது.

இச்சம்பவத்துக்குப் பின்னா மாநகரசபையில் லைசன்ஸ் எடுக்காத சைக்கிள்காரர் தின மும் வந்து லைசன்ஸ் எடுத்துச் செல்கின்றனர். (37)

## மீண்டும் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமான நிலைய வீதி வழியாக மோட் டார் சைக்கிள் பயணம் மீண் டும் தடை செய்யப் பட்டுள் ளது.

இவ்வழியாக சைக்கிள் மட் டும் செல்ல அனுமதிக்கப் படு கின்றது. ஆனால் இறங்கி உருட்டிச் செல்ல வேண்டும். (37

## மட்டுநகர் மாநகர சபையில் சம்பளம் வழங்கப் பணம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபை நிதி நெருக்கடியின் எதி ரொலியாக இம்மாதம் ஊழி யர்கள் சம்பளம் வழங்குவ தற்கு 2 1/2 இலட்சம் ரூபா கச்சேரியால் கடனாக பெற் றுள்ளது.

மாதாந்தம் 11 இலட்சம் ரூபா சம்பளம் வழங்க தேவைப்படுகின்றது. இதில் 5 இலட்சம் 67 ஆயிரம் ரூபா உள்ளூராட்சித் திணைக்களம் வழங்குகிறது. (37)

## வட-கிழக்கு அரச அதிபர்கள் மகாநாடு யூன் எட்டில்

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங் களில் உள்ள மாவட்ட அர சாங்க அதிபர்களின் மாநாடு ஜூன் மாதம் 8 ஆம் திகதி மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் மாகாண அமைச் சுகளின் செயலாளர்களின் மாநாடு 9 ஆம் திகதி சனிக்கி ழமை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு அரசாங்க அதி பர் திரு. ஆர். யோகநாதன் மேற்கொண்டுவருகிறார்.


# ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES - AIDE (MALE)**

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சிநெறி
**10-06-1990** இல் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகளுக்கு

Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B.961)


புங்குடுதீவில்

## இரு உபதபால் அலுவலகங்கள் சீராக இயங்குவதில்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்குப் பகுதி யாகிய கண்ணகை அம்மன் கோயிலின் அயலிலுள்ள உப தபால் நிலையமொன்றில் கடமையாற்றும் உபதபாலதி பர் ஒருவர் குறிப்பிட்ட நேரத் திற்குசமூகமளிப்பதில்லை.என இப்பகுதி மக்கள் குறைப்பட் டுக் கொள்கிறார்கள்.

காலையில் கடமை நேரத் திலும் பார்க்க நீண்டநேரம் பிந்தி வருவதால் மேற்படி உபதபாலகத்திற்கு வரும் மக் கள் இவரை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டி ஏற்படு கிறது.

அத்துடன் தபாலகம் பூட் டப்படவேண்டிய நேரத்திற்கு முன்பே பூட்டப்பட்டு விடுவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படும் காலங் களில் அப்பணத்தைப் பெற வரும் வயோதிபர்களிடம் சீறி விழுவதாகவும் மக்கள் குறை கூறுகின்றனர்.

இறுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள உபதபாலகத் தில் கடமையாற்றும் உப தபாலதிபர் கடமை நேரத் தில் தபாலகத்தை மூடிவிட்டு வீட்டுக்குச் சென்று வீட்டு வேலைகளைக் கவனித்து விட்டு வருகின்றார்.

இதனால் மூடப்பட்டிருக் கும் நேரத்தில் இங்கு வரும் மக்கள் முழுநாளும் தபால கம் பூட்டு என நினைத்து போய்விடுகின்றனர். 22)

## நாடகப்போட்டி

(ஈச்சமோட்டை)

லெப். கேணல் ராதா நினைவாக மன்னார் மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் முழங் காவில் விநாயகர் விளை யாட்டுக் கழகம் தயாரித்து நடித்த அஞ்சாத நெஞ்சங் கள் என்னும் புரட்சி நாட கம் முதலாம் இடத்தை பெ றது.

நல்லூர்- ஆலங்கேணி எவ ரெடி விளையாட்டுக் கழகம் தயாரித்து வழங்கிய காத்த வராயன் என்னும் புராதன வரலாற்று நாடகம் மூன் றாம் இடத்தையும் பெற்றன பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்ப்பட்டன. (43

## மட்டக்களப்பு ஆஸ்பத்திரி; இரு லிப்டும் பழுது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புபொது வைத் திய சாலையிலுள்ளஇரு லிப்ற் களும் பழுதடைந்து பல வரு டங்களாகியும் இது வரை திருத்தப்படாத நிலையிலுள் ளன.

பிரசவ வார்ட், சத்திர சிகிச்சை வார்ட் உட்பட 10 வார்ட்களுக்கு நோயாளிகள் எடுத்துச் செல்ல மேற்படி ''லிப்றகள்'' பயன் படுத்தப் படுகின்றன.

இரு ''லிப்ற்''களும் இயங் காத நிலையிலிருப்பதால் நோயாளிகள் நடத்தியும், தூக்கியும் கொண்டு செல்லப் படுகின்றார்கள்.

பழுதடைந்துள்ளஇரு லிப்ற் களும் பராமரிப்பு இன்றி துருப்பிடித்தநிலையில்காணப் படுகின்றன. (37)

## பருப்பு விலை ரூ.1.50 சதம் குறைப்பு

(கொழும்பு)

மைசூர்ப் பருப்பின் விலை ஒரு கிலோ ஒரு ரூபா ஐம்பது சதத்தால் குறைக்கப் பட்டுள் ளது என வர்த்தக வியாபார அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான பணிப் புரையை அமைச்சர் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத் துக்கு விடுத்துள்ளார்.

பாவனையாளருக்கு நிவார ணம் அளிக்கும் வகையில் இது குறைக்கப் பட்டதாக அமைச் சர் கூறினார்.

இதே சமயம் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் தருவிக்கும் பருப்பு, பெரிய வெங்காயம் அடுத்த சில தினங்களில் கொழும்பு துறை முகத்தை வந்து சேரும் என உணவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித் தார்.

## காப்புறுதி கூட்டுத்தாபனம் நிதியுதவி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினரால் சுடப்பட்ட போது நிரந்தரமாகவே அங்க வீனம் அடைந்துள்ள எஸ். மரியநாயகத்துக்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத் தினால் நிதியுதவி வழங்கப் பட்டது.

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு திசை கோட்படுத்தல் பயிற்சி

(மட்டக்களப்பு)

பயிலுநர் ஆசிரியர் தமது கற்பித்தல் மூலம் பயிற்றப் பட்ட, பட்டதாரி ஆசிரியர் களை விட சிறந்த ஆசிரியர் கள் என்பதை செயலில் காட்டவேண்டும்;

மேற்கண்டவாறு மட்டக் களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் ஆசிரியர் பயி லுநர்களுக்கான திசை கோட் படுத்தல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

அரசடி ம. வி. மண்டபத் தில் மேற்படி வைபவம் நடை பெற்றது.

அவர் மேலும் உரையாற் றுகையில்—

ரூபா 1000 ஆசிரியர் ஜனச விய ஆசிரியர் என சிலரது விமர்சனம் காரணமாக உளத் தாக்கம் ஏற்படலாம்.

இத்தகைய விமர்சனங்களை பற்றி நீங்கள் சிந்திக்க வேண் டாம்.

சேவைமனப்பான்மையுடன் செயல்பட்டு சிறந்த ஆசிரியர் கள் என்பதை எடுத்துக் காட் டுங்கள் என்றார். (37)

## பௌசர் விழுந்து சாரதி காயம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகிப்பதற் காக சாட்டிக்குச் சென்று குடி நீரை எடுத்து வந்த வேளை யில் பௌசர் குடைசாய்ந்த தனால் சாரதி பலத்த காயம டைந்தார்.

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவு சங்க பௌ சர் சென்ற திங்கள் காலை சாட்டியில் நீரை எடுத்துக் கொண்டு வந்த போது குறிச் சுக்காட்டு வெளியில் வீதியி னின்றும் விலகி தலைகீழாக விழுந்தது. இதனால் இதனை ஓட்டி வந்த சாரதி கு. மயில் வாகனம் என்பவர் பலத்த காயங்களுடன் தெய்வாதீன மாக உயிர் தப்பினார்

பௌசரில் நிறைக்கப்பட்டி ருந்த சுமார் எழுநூறு கலன் நீரும் வீண் விரயமாகியதுடன் பௌசரும் பலத்த சேதம டைந்தது. (22)


விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! **BASF**

மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

விஞ்ஞானபீட கல்வியாண்டு
1989/1990

மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்

## விவசாய இரசாயனங்கள்

தற்போது வடபகுதியெங்கும்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வெங்காய பயிரைத் தாக்கும் நுனி கருகல், தண்டு வெளிறல் ஊதா கொப்புள நோய், தண்டு அழுகல் போன்ற நோய்களை முற்றிலும் கட்டுப்படுத்த

# பொலிராம் M பாவியுங்கள்.




தற்பொழுது
வெங்காய செய்கையாளர்களால்
விரும்பிப் பாவிக்கப்படும் ஓர் பூச்சிநாசினி

# பேர்fவெக்தியோன்

வெங்காயச் செய்கையில் செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க
பேர்fவெக்தியோன் பூச்சிநாசினியை உபயோகியுங்கள்.

FINCHEM
AGRO DIVISION

**BASF** உற்பத்திகளை "பின்கெம்" **(FINCHEM)** வழங்குகின்றது. சகல விவசாய இரசாயன வியாபாரிகளிடமும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

(பீடை நாசினிகள் அபாயகரமானவை அவதானமாக பாவியுங்கள்.)

B-1019

இலங்கை.

## விஞ்ஞானபீட கல்வியாண்டு
## 1989/1990

இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட விஞ்ஞானபீட மாணவர்களுக்கான 1989 / 90 ஆம் கல்வியாண்டு 25. 06. 1990 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

—பதிவாளர்

B. 1044

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## இரும்புக் கேடர்களுக்கான கூறுவிலைகள்

உடைந்த நகர மண்டப கட்டிடத்திலும் மாநகர சபை அலுவலக கட்டிடத்திலும் உள்ள இரும்புக் கேடர்களை (Girders) விலைக்கு விற்பதற்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கூறுவிலைகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளரால் 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(B/1045

## காணவில்லை

பெயர்: பாலன் முருருப்பிள்ளை

திருகோணமலையைச் சேர்ந்தவர், உயரம் 5 அடி இருக்கும். பொது நிறம், கடைசியில் காணப்பட்டபோது அரை காற்சட்டையும், வெள்ளையில் மெல்லிய கோடிட்ட சேட்டும் அணிந்திருந்தார், புத்தி சுவாதீனமுற்றவர்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

திரு. செல்லத்துரை
கோணாமலை லேன், கொக்குவில் கிழக்கு.
தகவல்: செ. மகாலிங்கம்

R,317

## சிந்தனைக்கு

ஆசையின் தாகம், முழுக்கத் தீர்வதுமில்லை,
ஒருபோதும் தணிவதுமில்லை.

— ஸிஸரோ

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 31 - 05 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208
த. பெ. எண். 05

# சீதன முறை

சீதனக் கொடுமை உட்பட பெண்களுக்கெதிரான சமூக அநீதிகளை ஒழித்துக்கட்டுவதுட்பட மொத்தம் பத்து அம்சங்கள் கொண்ட புதிய யாப்பு ஒன்றை விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் மூன்று நாள் மாநாடு உருவாக்கியிருக்கிறது.

பெண்ணினத்தின் கௌரவத்துக்கும் சுதந்திரத்துக்கும் இழுக்குத் தருவதும் சமூக சாபக்கேடாக விளங்குவதுமான சீதனக் கொடுமையை முற்றாக ஒழித்துவிடப் போராடுவது என்பது இந்த யாப்பின் முக்கியமான அம்சம்.

சீதனக் கொடுமைபற்றி மேடைகளில் முழங்குவதும் அரசியல்கட்சிகளின் மாதர் மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றுவதும் பத்திரிகைகளில் எழுதுவதும் கடந்த காலங்களில் நடைபெற்ற சீதனக் கொடுமை ஒழிப்பு!

இலங்கைப் பாராளுமன்றத்தில்கூட இதுவரை சீதனம் கொடுப்பதையோ வாங்குவதையோ தடுப்பதற்கு எவருமே மசோதா கொண்டு வந்ததில்லை.

இப்பொழுது ஆயுதம் ஏந்திய வீராங்கனைகளைக் கொண்ட விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி சீதனக் கொடுமையை முற்றாக ஒழிக்கப் போராடுவது என்று தங்கள் கொள்கையாக அமைப்பின் யாப்பிலேயே ஓர் அம்சமாகச் சேர்த்துக்கொண்டிருக்கிறது.

இந்தியாவில் வரதட்சணை ஒழிப்பு சட்டமாக்கப்பட்டு இருந்தாலும் இன்னமும் அங்கு வரதட்சணைக் கொடுமையால் தினமும் நடைபெறும் அட்டூழியங்கள் அநேகம்.

சீதனக் கொடுமையை ஒழிக்கவேண்டுமென்று கூறும்பொழுது ஆண்கள்தான் இதற்கு முழுக்க முழுக்க காரணம் என்ற கருத்து வெளிப்படுகிறது.

நமது சமுதாயத்தில் சீதனம் வாங்காமல் திருமணம் செய்துகொண்டுள்ள, செய்துகொள்ளும் ஆண்களுக்கு இன்றைய சூழ்நிலையில் சமுதாயத்தில் மட்டுமல்ல பெண்வீட்டிலேகூட மதிப்பிருப்பதில்லை. அவன் ஒரு ஏமாளியாகவே கருதப்படுகிறான்!

நமது சமுதாயத்தில் இப்பொழுது ஆண்களைவிட கல்வி கற்கும் பெண்களே அதிகமாக உள்ளனர்.

உயர் கல்வி கற்ற பெண், உத்தியோகம் பார்க்கும் தன்னைவிட உயர்ந்த படிப்புப் படித்தவனை, அரச சேவையில் உயர்ந்த உத்தியோகம் பார்ப்பவனை, நல்ல வருமானமுள்ள ஒருவனைத் திருமணம் செய்துகொண்டால்தான் தனக்கு சமுதாயத்தில் மதிப்பிருக்குமெனக் கருதுகிறாள்.

படித்த பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைக்க

# குடியேற்றத்தால் திருமலையில் மாற்றமடைந்த இன விகிதாசாரம்

கிழக்கு மாகாணத்தில் குடிசன அதிகரிப்பை இனரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் வகுத்து தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் படிப்படியாக திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் எந்த அளவு குடிசன வீக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அரச புள்ளி விபரங்களுடன் தமிழ் பேசும் மக்களின் கவனத்திற்கு கொண்டு வர எமது சம்மேளனம் விரும்புகின்றது.

வடகிழக்கு மாகாணத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தலமாக இன்று இருந்து வருவது திருமலை. யாகும். வட-கிழக்கில் உள்ள 8மாவட்டங்களுக்கும் தலைநகராகஅமைந்துள்ளதுதிருமலை வட-கிழக்கில் நிருவாக இயந்திரம் திருமலையில் தான் பொருத்தப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையின்தீர்வுக்கு நடாத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் போது திருமலை மாவட்டம் சிங்களவர்களின் பிரதேசம்என'இலங்கை அரசாங்கத்தினால் உரிமை கோரப்பட்டுவந்துள்ளது. இந்த விவகாரத்தைஇலங்கை அரசாங்கம் புள்ளி விபரங்களுடன் வரைபடங்கள் மூலமும் இந்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டி நியாயப் படுத்த முற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

இலங்கையில் இதுவரை 11 தடவைகள் நாடளாவிய குடிசன கணக்கெடுப்பு மேற் கொள்ளப்பட்டன முதலாவது கணக்கெடுப்பு 1827இல் ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து 1881, 1891, 1901, 1911, 1921, 1946, 1952, 1963, 1971, 1981, ஆகிய ஆண்டுகளில் குடிசன மதிப்பெடுப்பு நடாத்தப்பட்டன. அடுத்த கணக்கெடுப்பு 1991ஆம் ஆண்டில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### தமிழர்விகிதாசாரம் வீழ்ச்சிப் போக்கு

1921 ஆம் ஆண்டிற்குப் பின்பு 25 வருடங்கள் கழிந்த பின்புதான் குடிசன மதிப்பீடு 1946இல் நடைபெற்றது. திருமலை மாவட்டத்தில் 1981 இல் 64 வீதமான தமிழ் மக்களும், 25 வீதமான முஸ்லிம்களும் 4 வீதமான சிங்களவர்களும் வாழ்ந்தனர். 1891 66 வீதமான தமிழர்களும்,25 வீதமான முஸ்லிம்களும் 4வீதமான சிங்களவர்களும் வாழ்ந்தனர். 1901ஆம் ஆண்டில் 60 வீதமான தமிழர்களும் 29 வீதமான முஸ்லிம்களும் 4 வீதமான சிங்களவர்களும் வாழ்ந்தனர். 1911 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி 58 வீதமான தமிழர்களும் 32 வீதமான முஸ்லிம்களும் 4 வீதமான சிங்களவர்களும் வாழ்ந்தனர்1921ஆம்ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் படி 54 வீதமான தமிழர்களும் 37 வீதமான முஸ்லிம்களும் 4வீதமான சிங்களவர்களும் வாழ்ந்தனர். இந்த கணக்கெடுப்பை உற்று நோக்கும் போது திருமலைமாவட்டத்தில்1891 ஆம் ஆண்டில் இருந்து 1921 ஆம் ஆண்டிற்குட்பட்ட 30 வருடங்களில் முஸ்லிம் மக்களின் விகிதாசாரம் கணிசமான அளவு உயர்ந்து காணப்படுகிறது. இதே நேரம் தமிழர்களின் விகிதாசாரம் படி இறங்கிப் போவதை அவதானிக்கலாம்.

1921 ஆம் ஆண்டிற்குப் பின்பு திருமலை மாவட்டத்தில் குடிசனப் பெருக்கம்வேறு விதமாக அமைவதைக் காண முடிகின்றது.

1946இல் மேற் கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் திருமலை மாவட்டத்தில் 44. 5 வீத தமிழர்களும் 30 6 வீத முஸ்லிம்களும் 15 வீத சிங்களவர்களும் எனதெரியவந்தது இந்த காலகட்டத்தில் இருந்துதான் திருமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் படிப்படியாக ஆரம்பமாகின்றது.

நாடு சுதந்திரமடைந்த பின்பு நடைபெற்ற முதலாவது குடிசன மதிப்பீடு 1953 இல் ஆகும் இந்தக் கணக்கெடுப்பில் திருமலை மாவட்டத்தில் 44 வீதம் தமிழர்களும் 34 வீதம் முஸ்லிம்களும் 18 வீதம் சிங்களவர்களுமென தெரியவந்தது.1948க்கு முன்பு திருமலை மாவட்டத்தில் வாழ்ந்த பெரும்பான்மைஇன மக்களின் தொகை 4324 மட்டுமே.

### திட்டமிட்ட குடியேற்றம்

1948இல் முதன்முதலாக கந்தளாய் என்ற தமிழ் கிராமத்தில் 1320 சிங்களவர்கள் டி. எஸ். சேனநாயகாவின் அரசினால் குடியமர்த்தப்பட்டனர். 1949இல் பார்வதிபுரம் என்ற பழம் தமிழ் கிராமத்தை ஐக்கிய தேசியக் கட்சி அரசு பதவியா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1112 சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1950இல் மூதூர் தொகுதிக்குட்பட்ட அல்லை என்ற தமிழ் மக்கள் கிராமத்தில் 744 சிங்களவர்கள் பலவந்தமாகக் குடியேற்றப்பட்டனர். 1953இல் மேலும் பல ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் அல்லையில் குடியமர்த்தப்பட்டனர். 1963இல் நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் போது தமிழ் மக்களின் விகிதாசாரம் 39வீதமாக வீழ்ச்சி கண்டும் முஸ்லிம் மக்களின் விகிதாசாரம் 30 வீதமாகப் படி இறங்கியது. அதேநேரம் சிங்கள மக்களின் விகிதாசாரம் 29 வீதமாக உயர்ந்தது.

1957இல் முதலிக்குளம் என்ற தமிழ் கிராமம் 'மெறவீவ' என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டு 612 சிங்களவர்கள் இறக்குமதி செய்யப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். 1960இல் திருமலை நகருக்கு அண்மையிலே உள்ள பகுதியில் 'அபயபுரம்' என்ற பெயரில் குடியேற்றம் புதிதாக உருவாக்கப்பட்டு 60 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இதேநேரம் பெரியகுளம் என்ற பகுதியில் உள்ள நந்தனார் என்ற பூர்வீக தேவாலயம் சிங்கள மக்களின் பௌத்த விகாரை என்று வர்ணிக்கப்பட்டு அங்கு 112 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. 1960இல் திருமலை நகருக்கு அண்மையிலே உள்ள உப்புவெளி கிராமத்தில் 'சிறிமாபுரம்' என்ற மீனவர் கிராமம் உருவாக்கப்பட்டு 80 சிங்கள மீனவ குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. 1961இல் திருமலை நகருக்கு அணித்தாகவுள்ள மட்கோ என்ற இடத்தில் 53 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கு சகல வளங்களும் வசதிகளும் ஆக்கிக் கொடுக்கப்பட்டன.

1962இல் திரியாய் என்ற தமிழ் கிராமத்தில் கந்தசாமி கோவிலுக்கு அணித்தாக பௌத்த ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு 73 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. 1963இல் 'மிகுந்தபுரம், ஜெயந்திபுரம்' என்ற இரு சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பமாகின. இந்த இடங்களில் தலா 40 சிங்களக் குடும்பங்கள் வீதம் குடியமர்த்தப்பட்டனர்.இதே ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் ஆண்டான் குளப் பகுதியில் 121 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. 1964இல் சைனாவே சீனக்குடாவில் ஒரு பௌத்த விகாரையும் ஒரு சிங்களப் பாடசாலையும் கட்டப்பட்டது. ஆனால்இன்றுஅங்கு 41சிங்கள குடும்பங்கள் மாத்திரம்உண்டு. 1966இல் பாலன் போட்டஆறு பகுதியில் 30 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.இதேநேரம் 1968இல் பெரிய குளமென்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதி 'நாமல்வத்தை' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1971இல் மூதூர் பிரதேசத்தில் உள்ள கிளிவெட்டி என்ற தமிழ் பழங்குடி மக்கள் வாழ்ந்துவந்த கிராமத்திற்கு அருகில் 92 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு அந்தப் பகுதிக்கு 'தெய்கிவத்த' என்ற நாமமும் சூட்டப்பட்டது. இதனிடையே 1971இல் நடைபெற்ற குடிசன மதிப்பீட்டில் தமிழ் மக்கள் 37வீதம் சிங்களவர்கள் 31வீதம் முஸ்லிம்கள் 29 வீதம் எனத் தெரிய வந்தது. இவ்வளவு காலமும் சனத்தொகையில் 2ஆம் இடத்திலே இருந்துவந்த முஸ்லிம் மக்கள் 1971ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டனர்.

1974இல் மேலும் பல சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. கந்தளாய்ப் பகுதியில் முஸ்லிம் மக்களின் ஆதிக்கத்திலிருந்து வந்த 96ஆம் கட்டை, முள்ளிப்பொத்தானை ஆகிய பகுதிகளில் 72 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.1981ஆம் ஆண்டில் நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் போது திருமலை மாவட்டத்தில் தமிழர்கள் 36 வீதம் சிங்களவர்கள் 34 வீதம் முஸ்லிம்கள் 28 வீதம் எனத் தெரிய வந்தது.

### இல்டன் இப்றாகிம்

அதாவது தமிழர் 93510, சிங்களவர் 86341, முஸ்லிம்கள் 74403 ஆவர். இந்த மதிப்பை உற்று நோக்கும் போது சிங்களவர்களும், தமிழர்களும் ஏறக்குறைய சமமாகவே காணப்படுகின்றனர். ஆனால் முஸ்லிம்களும் தமிழர்களும் தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் ஒன்றிணையும் போதுதான் ஓரளவு மன நிறைவு அடைய முடியும். 1982-ல் திருமலை நகரப் பௌத்த விகாரைக்கு அருகில் சிங்களவர்களை குடியமர்த்தி அன்றைய மாவட்ட அமைச்சர் வீடுகளும் கட்டிக்கொடுத்தார். இதே ஆண்டில் குச்சவெளிக்கு அளித்தாகவுள்ள புடவைக்கட்டு என்ற பகுதியில் மேலும் 30 மீனவ சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இந்த இடம் இன்று சாகரபுரம் என அழைக்கப்படுகின்றது.

1948-ல் இருந்து 1981வரை திருமலை மாவட்டத்தில் 78471 சிங்களவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் குடியேற்றப்பட்டனர். இன்று திருமலை மாவட்டத்தில் ஏறக்குறைய 95000 சிங்களவர்கள் வாழ்வதாக அதாவது சிங்களவர்களும் தமிழர்களும் சனத்தொகையில் சமநிலை அமைந்துள்ளதாக கணிக்கப்படுகின்றது.

திருமலை மாவட்டம் இன்று சர்ச்சைக்குரிய மாவட்டமாக இருந்து வருகிறது. 40 வருடகால பாராளுமன்ற ஆட்சியின்போது இந்த மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்ற கதிரைகளை அலங்கரித்த தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் தான் இந்த சிங்கள குடிசன

# தொண்டமான் அமைச்சிலும் தமிழுக்கு இடமில்லை

(கொழும்பு)

கிராமிய தொழிற்துறை

பிரசுரமாகியுள்ளது.

தமிழரான திரு. சௌமிய

# பால் கோள்வனவிற்கு வாகன வசதிசெய்ய நடவடிக்கை

வவுனியாவில் உள்ள கிராமங்கள் தோறும் பால் கொள்வனவிற்காக வாகனவசதி

அண்மையில்வவுனியாவிற்கு வந்திருந்த இவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

... உத்தியோகம் பார்க்கும் தன்னைவிட உயர்ந்த படிப்புப் படித்தவனை, அரச சேவையில் உயர்ந்த உத்தியோகம் பார்ப்பவனை, நல்ல வருமானமுள்ள ஒருவனைத் திருமணம் செய்துகொண்டால்தான் தனக்கு சமுதாயத்தில் மதிப்பிருக்குமெனக் கருதுகிறாள்.

படித்த பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைக்க வேண்டுமென்றே பெண்ணைப் பெற்றவர்களும் கருதுகிறார்கள்.

உயர் படிப்புப் படித்து உத்தியோகம் பார்க்கும் பெண்களில் எத்தனைபேர் ஒருவிவசாயியையோ சாதாரண தொழிலாளியையோ மணம் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறார்கள்?

உயர்ந்த படிப்பும் உயர்ந்த உத்தியோகமும் உள்ள ஒருவனே தனது தகுதிக்கு ஏற்றவன் என்று பெண்ணும் பெண் வீட்டாரும் கருதும்போது அத்தகுதியுடைய மாப்பிள்ளையை தேடித் தெரிவு செய்கிறார்கள்.

தேடலும் தெரிவும் அதிகரிக்க சீதனத்தின் தொகையும் அதிகரிக்கிறது.

சீதன முறையினால் வெளிநாடுகளில் கஷ்டப்பட்டு உழைக்கும் பணம் இங்குள்ள காணிகளின் விலையை உயர்த்தியிருக்கிறது.

நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படவேண்டிய பணம் வீணாக முடங்கிக் கிடக்கிறது; சமுதாயத்தில் வசதி குறைந்த பெண்கள் மணம் செய்ய முடியாமல் மூலைக்குள் கிடந்து நெடுமூச்சுவிட்டு ஏங்கிக் கிடக்கவேண்டியிருக்கிறது.

ஆயுதம் ஏந்திய வீராங்கனைகள் சீதனக்கொடுமையை முற்றாக ஒழிக்கக் கங்கணங்கட்டியிருக்கிறார்கள்.

சீதனம் வாங்காமல் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்புக் கிடைக்கச் செய்வது சீதனக் கொடுமை நீங்க ஒருவழி!

மகளிர் முன்னணியின் முயற்சி உறுதி வெற்றியளிக்க வாழ்த்துவோம்!

# கொள்வனவு, அன்பளிப்பில் ப. நோ. கூ. சங்கம் மோசடி

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியிலுள்ள ப.நோ.கூ.ச. மாசி கொள்வனவு, அன்பளிப்பு சுவர்க் கடிகாரம் ஆகியவற்றில் மோசடிகள் செய்துள்ளதாக விழிப்புக்குழுவிடம் புகார் செய்யப் பட்டுள்ளது.

மாசி கொள்வனவில் சுமார் 24,000 ரூபா மோசடி இடம் பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள சோப் உற்பத்தி நிறுவனம் கொள்வனவு ஊக்குவிப்பு அன்பளிப்பாக வழங்கிய ஒன்பது சுவர் கடிகாரங்கள் நிர்வாகிகள் தமக்குள் பகிர்ந்தளித்து கொண்டனராம்.

இம்மோசடி தொடர்பான ப.நோ.கூ.ச. நிர்வாகம் தற்போது இல்லை.

ஆனால் விழிப்புக் குழுவினால் விசாரணை தொடர்வதாக தகவல்கள் தெரிவித்தன.

(37)

# தோண்டமான் அமைச்சிலும் தமிழுக்கு இடமில்லை

(கொழும்பு)

கிராமிய தொழிற்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தொழிற் திட்டங்கள் குறித்த நூல், சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே அச்சிடப்பட்டுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை தொழிலாளர்களின் நன்மை கருதி நூற்றுக்கணக்கான தொழில் திட்டங்கள் இந்த நூலில் வெளியிடப்பட்டுள்ளது.

இதே போல கைத்தொழில் அபிவிருத்திச் சபை வெளியிடும் ஏனைய பிரசுரங்கள் மற்றும் கைத்தொழில் என்ற சஞ்சிகையும் சிங்களத்திலேயே பிரசுரமாகியுள்ளது.

தமிழரான திரு. சௌமிய மூர்த்தி தொண்டமானின் அமைச்சு, இவ்வாறு தமிழ் மொழியை புறக்கணித்து நடக்கும்போது ஏனைய அமைச்சுக்களை குறை கூறிப்பயன் இல்லை. என்று தமிழ் கைத்தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

எனவே தமிழ் கைத்தொலாளர்களின் நன்மை கருதியாவது இவற்றை தமிழ் மொழியில் வெளியிட அமைச்சர் தொண்டமான் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ் கைத்தொழிலாளர்கேட்கின்றனர்.

# கோவில் போரதீவில் விளையாட்டு விழா

(அம்பாறை)

கோவில் போரதீவு உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் 26ஆம் ஆண்டு நிறைவு விளையாட்டு விழா மேற்படி கழக மைதானத்தில் கடந்த செவ்வாயன்றுநடைபெற்றது.

மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், சுவட்டு மைதான நிகழ்ச்சிகளுடன் கிராமிய பழம்பெரும் விளையாட்டுக்களான கயிறு இழுத்தல், பொல் இழுத்தல், மாட்டு வண்டிச் சவாரி, தடைதாண்டி ஓடுதல், சறுக்குமரம் ஏறுதல் போன்ற விளையாட்டுக்களும் இடம்பெற்றன,

இவ்விழாவில் பிரதம அதிதிகளாகமட்டக்களப்புமாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். யோகநாதன், மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் திரு. கரிகாலன், திரு. எம். எம். புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக விடுதலைப் புலிகள் மட்டு. அம்பாறை இராணுவத் தளபதி திரு. கருணா, போரதீவுப் பற்று விசேட ஆணையாளர் திரு எஸ். கோ. பாலசிங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு. க. தணிகாசலம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உதயதாரகை விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. கா. சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுவிழாவில் விளையாட்டு உத்தியோகத்தர் திரு. செ- லிங்கராசா ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைத்தார். (48)

## வளத்தாப்பிட்டியில் தையல் பயிற்சி நிலையம்

(அம்பாறை)

எந்தக் காலத்திலும், எந்த அரசாலும் கவனிக்கப்படாத வளர்த்தாப்பிட்டி தமிழ்க்கிராமத்தில் படித்து வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு தையல் பயிற்சியளித்து தொழில் வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

இதற்காக இங்கு தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி- அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோவும், சம்மாந்துறைப் பிரதேசப் புலிகள் பொறுப்பாளர் திரு. நிதியும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

(48)

# பால் கோள்வனவிற்கு வாகன வசதிசெய்ய நடவடிக்கை

வவுனியாவில் உள்ள கிராமங்கள் தோறும் பால் கொள்வனவிற்காக வாகனவசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. லங்காநேசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில்வவுனியாவிற்கு வந்திருந்த இவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். திரு. லங்காநேசன் வவுனியாவில் பாதிப்படைந்த பகுதிகளையும் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

வவுனியா கால் நடைவளர்ப்போர் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருப்போருக்கு மேலும் கடன் வசதி செய்து கொடுக்க ஆவன செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே மேற்படி அங்கத்தவர்களில் சுமார் 150 பேருக்கு ஏழரை லட்சம் ரூபா பணம் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

வவுனியா கால் நடை வளர்ப்போர் சங்கத்தின் தலைவராக கால் நடை வைத்திய அதிகாரி திருமதி சிவபாத சுந்தரமும், இதன் செயலாளராக சமாஜத் தலைவர் திரு. வீரசிங்கமும் பணிபுரிந்து வருகின்றனர். (தி)

## கவி அரங்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ''கவி அரங்கு'' எதிர் வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

உதவி அரச அதிபர் பிரிவுகளிடையிலான, மாவட்ட ரீதியிலான போட்டிகளில் 1 ஆம் 2ஆம் 3ஆம் இடங்களைப் பெற்ற கவிஞர்கள் இக் கவி அரங்கில் கலந்து கொள்வார்கள் என தலைமையக உதவி அரச அதிபர் இரா. நாகலிங்கம் தெரிவித்தார். (37)

# பெற்றோல் நிலையங்களில் காற்றடிக்க வசதியில்லை

ஆசிரியர்,
ஈழநாதம்.

அதிகமான மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கள் மலிந்தகாலம் இது. ஆண்கள், பெண்கள், அரச உத்தியோகத்தர், வியாபாரிகள், அதிகமான பள்ளி மாணவர்கள் எல்லாம் இன்று மிதி வண்டிகளுக்குப் பதிலாக மோட்டார் சைக்கிள்களையே பயன் படுத்துகிறார்கள். இதைத் தவிர மோட்டார் வண்டிகள், மினி

## மக்கள் மடல்

பஸ்கள், சுமையூர்திகள், உழவு இயந்திரங்கள் போன்ற மோட்டார் வாகனங்களின் பாவனையும் மிக அதிகம். இவ்வாகனங்களுக்கு எரிபொருள் குறைந்தால் எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரி பொருளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இவ்வாகனச் சக்கரங்களுக்கு காற்றுப் போதாதிருந்தால் அல்லது முற்றாக போய் விட்டால் மட்டக்களப்பு நகரத்தில் உள்ள எந்த எரி பொருள் நிரப்பும் நிலையத்திலும் (பெற்றோல் ஷெட்) காற்றடிக்கும் வசதி இல்லையாம்.

இது பற்றி எரிபொருள் நிலையங்களில் கேட்கும் போது ஏரியா மனேச்சரைக் கேட்கும்படி கூறுகிறார்களாம். பெற்றோலியக் கோப்பரேசன் மூலந்தான் எரி பொருள் விற்பனை நிலையங்களில் காற்றடிக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

மா-கணேசதுரை
மட்டக்களப்பு.
27.5.90

திருமலை மாவட்டம் இன்று சர்ச்சைக்குரிய மாவட்டமாக இருந்து வருகிறது. 40 வருட கால பாராளுமன்ற ஆட்சியின்போது இந்த மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்ற கதிரைகளை அலங்கரித்த தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் தான் இந்த சிங்கள குடிசன பெருக்கத்திற்கான சகல பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் முஸ்லிம் மக்களைப் பொறுத்தளவில் அவர்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றம் சென்றபிரதிநிதிகள் தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டதால் தாயகத்தையும் கொழும்பு தலைமைத்துவத்தை நம்பியதால் தனித்துவ பரிமாணத்தை இழந்து நிற்கின்றார்கள். பேரினவாதிகளுக்கு இருந்துவந்த அக்கறையும் கரிசனையும் அவசரமும் இப்பிரதேசத்திலிருந்து பாராளுமன்றம் சென்ற மக்கள் பிரதிநிதிகளிடம் இல்லாமல் போனது பெரும் துர் அதிஷ்டமாகும்.

இந்த சிங்களக் குடியேற்ற பிரச்சினை மீண்டும் தலை தூக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் தமிழ் பேசும் மக்களின் சகல தரப்பினரதும் பொறுப்பும் கடப்பாடுமாகும்.

# இரண்டாவது இடம்

(யாழ்நகர்)

அகில இலங்கை ரீதியில் தேசிய வீரர் தினத்தை முன்னிட்டு கலாசார அமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் தி நடனசபேசன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் கொழும்பில் நடைபெற்ற தேசிய தினவிழாவில் இம்மாதம் 22ஆம் திகதி பிரதம மந்திரி திரு. விஜேயதுங்க அவர்களினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (52)

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

# பாவற்குளத்தில் ஸ்ரீலங்கா ராணுவம் திடீர் சோதனை மக்கள் அச்சம்

(வவுனியா)

கடந்த திங்கட்கிழமை பாவற்குளம் முகாமில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அப்பகுதி வீதிகளிலும், வீடுகளிலும் சோதனையில் ஈடுபட்டனர்.

இவர்கள் வீதியால் சென்ற வாகனங்களை நிறுத்தியும், பாதசாரிகளை நிறுத்தியும் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் பீதியும் பதற்றமும் நிலவின. திடீரென்று இடம் பெற்ற இச்சம்பவம் காரணமாக அச்ச நிலைக்குள்ளாகினார்கள்.

வவுனியா புலிகள் வட்டாரங்கள் இதுபற்றி மேற்படி இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டபோது வேறொரு இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் உலுக்குளம் சிங்களக் கிராமப் பகுதியில் நடமாடுகின்றனர் என்ற சந்தேகத்தின் காரணமாக தாம்மேற்படி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டதாம்.

இப்படிப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் இதனால் மக்கள் அச்ச நிலைகுள்ளாகிறார்கள்என்றும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரைக் கேட்டுக்கொண்டதாகப் புலிகள் வட்டாரங்களிலிருந்து அறியப்பட்டது.

இராணுவ முகாமிலிருந்து சோதனை நடவடிக்கை பற்றி தெரிவித்த காரணத்தில் எதுவித உண்மையுமில்லை என்றும், மக்கள் மத்தியில் குழப்பத்தையும், அச்ச நிலையையும் உண்டாக்கவே படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் புலிகள் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. (தி)

## மாணவர் சேர்ப்பில் ஒழுங்கைப் பேண மூன்று பேர் குழு

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது நேர்மையான முறை கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மூன்று பேரைக்கொண்ட விசேஷகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது ஊழல்களும், மோசடிகளும் இடம் பெறுகின்றன.

இவற்றை ஒழிக்கும் பொருட்டே மேற்படி மூ நியமிகசுப்பட்டதாகக்கூறப்படுகிறது.

## யாழ். கல்வித் திணைக்களத்தில் மாவட்டமுகாமைத்துவநிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் மாவட்ட முகாமைத்துவ நிலையம் ஒன்று கட்டப்படவுள்ளது.

இதற்காக முப்பத்தைந்து லட்சம் ரூபாவை கல்வியமைச்சு வழங்கியுள்ளது.

இந்த அலுவலகத்துக்கு என இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஆசனங்களும் கல்வியமைச்சால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இந்த அலுவலகம் திறக்கப் பட்டால் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குகள் வகுப்புக்களை இங்கு நடத்தலாம் என கல்விப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மாகாணசபை நிர்வாகம் செலவு பற்றிக் கருத்தரங்கு

(கொழும்பு)

மாகாணசபைகளின் செலவு மற்றும் நிர்வாகம் தொடர் ... பாடு செய்யப்பட்டுள்ளன.

மாகாண சபைகள் அமைச்சரும், நிதி ராஜாங்க அமைச்

## மாலைதீவில் சதிப்புரட்சி; அமைசசரைக் காணவில்லை

(மாலே)

மாலைதீவில் ஜனாதிபதி அப்துல் கையூமுக்கு எதிராக சதிப் புரட்சி முயற்சி நடைபெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாதுகாப்பு துறை துணை அமைச்சர் இலியா இப்ரஹீம் நாட்டில் இல்லை என மாலைதீவு ஜனாதிபதி அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த அமைச்சர் கொழும்பு வழியாக நேற்று முன்தினம் இரவு குறிப்பிடப்படாத இடத்துக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாப் இப்ரஹீம் தலைவராகி உள்ள அரசுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனம் ஒன்றில் ஊழல்கள் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களையடுத்தே அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள மாலைதீவு தூதுவர் அகமட் அப்துல்லா தகவல் தருகையில் இந்த அமைச்சர் பற்றி எதுவும் தெரியாது என்றும் இந்த சதிப்புரட்சி பற்றி தனக்கு தகவல் ஏதும் தெரியாது என்றும் மறுத்துள்ளார்.

## கடமையுணர்வுள்ள ஊழியருக்கு சலுகைகள் வழங்கப்படும்

கடமையுணர்ச்சியுடன் சேவை புரியும் அரச ஊழியர்களுக்கு மேலதிக அலவன்ஸ், பதவி உயர்வு, பரிசுகள் என்பன வழங்கப்படும்.

இவ்வாறு பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா குளியாப்பிட்டியில் நடந்த வைபவம் ஒன்றில் கூறினார்.

அலுவலகத்துக்கு சென்று பிரச்சினைகளை எடுத்துக் கூறும் மக்களுக்கு உதவுவதே அரசாங்க ஊழியர்களின் கடமையாகும்.

இது குறித்து விசேட திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது. மாகாண சபைகளின் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் நகர் புறங்களில் கடமை புரியும் ஊழியர்கள் கிராமப் புறங்களுக்கு இடமாற்றம் செய்யப் படவுள்ளனர். இவர்களுக்கு விசேட படிப்பணமும் வழங்கப் படும் இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## அம்பாறையில் சிங்கள குடியேற்றம்; முஸ்லிம் காணிகள் சுவீகரிப்பு

(அட்டாளைச்சேனை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வெள்ளக்கல் தோட்டம், சின்னவிசாரை, பெரிய விசாரை ஆகிய வயல் கிராமங்கள் 1981 இல் முஸ்லிம்களிடமிருந்து அரசு சுவீகரித்திருந்தது.

இங்கு வெளி மாவட்டத்திலிருந்து வந்த சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

ஆனால் இந்த முஸ்லிம்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் என உறுதி ...சர்கள், தற்போதைய ஜனாதிபதி ஆகியோருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இப்பகுதி முஸ்லிம்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கான நட்டஈடு என்றாலும் கிடைக்கும் என எதிர்பார்த்தும் எதுவித பலனும் இன்றி தாம் காணியற்றவர்களாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## கிராமப்புறங்களுக்கு ஆசிரியர் இடம் மாற்றப்படவுள்ளனர்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட் ... லைகளில் உள்ள ஆசிரியர் பலருக்கு கிராமப்புற கஷ்டப்

## கல்முனைப் பாடசாலை காகிதாதிகள் வழங்கவில்

(நிந்தவூர்)

கல்முனை கல்விமாவட்டத்திலுள்ள பாடசாலைகளுகு இந்த வருடத்திற்கான காகிதாதிகள், வெண்கட்டிகள், உபகரணங்கள் என்பன இதுவரை வழங்கப்படவில்லையென கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் வெண்கட்டிகள்கூட இன்றி அதிபர்களும், ஆசிரியர்களும் பெரும் திண்டாட்ட நிலைக்குள்ளாகியுள்ளனர்.

இவற்றைப் பாடசாலைக ... கல்விப்பணிப்பாள கமா? அல்லது க பிரதம கல்வி அதிக லகமா? அல்லது வில், அக்கரைப்ப முனை உதவிக்கல்வி பாளர் அலுவலக என்பது பற்றி எத அறிய முடியாதுள் இலங்கை இஸ்லாமிய சங்க கல்முனை ம கிளைத்தலைவர் ஜ ஏ. உதுமாலெவ்வை நிருபரிடம் கவலை

## பாத்திரங் பாடசாலை சொ

(யாழ்ப்ப

மதிய உணவு சாலைகளில் ப பாத்திரங்களைப் யின் சொத்தா வேண்டும். அ சாலை வைபவங் ராத்திரி, குருபூ விசேட தினங்களிலு படுத்தலாம். இ களைத் தமது வ எவரும்எடுத்துச் தென யாழ். கல்விப் பாளர் திரு. இ. சுந்தர தெரிவித்தார்.

நேற்று வெளியான ஈ பத்திரிகையின் செ அடுத்தே இவ்வறிக் யிடப்பட்டது. இ பான சுற்றுநிருபம் சாலைகளுக்கும் அனுப் கப்படும்எனவும், இப்பொ கள் கல்வி அமைச்சால் கப்படாவிட்டாலும் இ பொது ஸ்தாபனங்களா நலன் விரும்பிகளாலும் கப்பட்டமையால் இவை சாலையின் சொத்தா கருதப்படும் எனவும் கூறினார்.

## இளைஞ கொள்ளை

(வவுனியா)

வவுனியாவிலுள்ள டியோ ஒன்றில் பணி பு வரும் இளைஞரிடமிரு கொழும்பில் வைத்து ப உட்பட பெறுமதி வாய்ந்த பொருட்கள் கொள்ளையடிக் கப்பட்டன.

கருத்தரங்கு இன்று கொழும்பில் நடைபெறுகின்றது.

...ம்பாது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இந்த கருத்தரங்குகள் ஏற்... சபைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## கைத்தறி நெசவு விருத்திக்கு ஐந்து ஆண்டுத் திட்டம்

(கொழும்பு)

நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்துள்ளது.

இதன் மூலம் உள்ளூர் கைத்தறிப் புடைவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியுமெனப்புடைவைக்கைத் தொழில் அமைச்சர் யூ பி. விஜயக்கோன் தெரிவித்தார்.

வருடாந்தப் புடைவைத் தேவை சுமார் நாற்பது கோடி மீற்றராகும். ஆனால் பதின்நான்குகோடிமீற்றர்புடைவை மட்டுமே இங்கு உற்பத்தியாகிறது எனவும் அமைச்சர் கூறினார்.

## மீனவர்களுக்கு நிவாரணம் அரசிடம் மீனவர் கோரிக்கை

(பொத்துவில்)

தொழில் வாய்ப்பை இழந்துள்ள மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படல் வேண்டுமென பல மாதங்களாக செய்தொழிலில் பாதிப்படைந்துள்ள மீனவர்கள் அரசாங்கத்திடம் கேட்கின்றனர்.

மீனினத்திற்கு புதுவித நோய் ஏற்பட்ட காரணத்தினால் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்க்கை நடாத்தி வந்த மீனவர்களும் மீன்வர்த்தகர்களும் பெரும்பாதிப்படைந்துள்ளனர்.

இவர்களுக்கு தமது குடும்பங்கள் விஷம்போல் ஏறி வரும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க வழியின்றி இன்னலுக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் மீன்பிடி அமைச்சின் மூலம் நன்நீர் ஆழ்கடல் மீனவர்களுக்கும் மீன் வர்த்தகர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படல் வேண்டுமென பாதிப்படைந்துள்ள மீனவர்கள் தெரிவித்தனர்

## ஒரே நாளில் பாஸ்போட் 500 ரூபா மேலதிக கட்டணம்

(கொழும்பு)

நாளை முதலாம் திகதி பாஸ்போட்டுக்களை ஒரே நாளில் பெற்றுக்கொள்வதற்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி நாளை காலை எட்டு மணிக்கும் பகல்இரண்டு மணிக்கும் இடையில் மேலதிகமாக 500 ரூபா செலுத்தும் விண்ணப்பங்களுக்கு இவை மாலை மூன்று மணிக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்காக விசேட கருமபீடம் ஒன்றும் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேசமயம் நாளை முதல் பாஸ்போட் விண்ணப்பப் படிவங்களை இலவசமாக வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரேநாளில் பாஸ்போட் எடுப்பதில் சில மோசடிகள் நடைபெற்று வருவதை தடுக்கவே இத்திட்டம் அமுலாகிறது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...இல்லை.

இது குறித்து முன்னாள் ஜனாதிபதி, முஸ்லிம் எம். பிக்கள், முஸ்லிம் அமைச்...

---

**விரயம்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்கள் அசமந்தமாக வேலை செய்கிறார்கள்.

போக்குவரத்துச் சேவையை திறம்பட செயற் படுத்தவும், நவீனமயப் படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றார்.

---

**கடலில் மூழ்கி**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வீசப்பட்டதாகவும் படகு மீன் வலைகளில் மாட்டுப்பட்டு ஆழ் கடலில் இருந்த வேளையிலேயே இச் சம்பவம் நடைபெற்றது.

---

**மாத்தயா - பிரேமா**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தரப்பினர் ஜனாதிபதியிடம் வற்புறுத்துவார்கள் எனத் தெரியவருகின்றது.

அத்தோடு தமிழ்ப் பிரதேச புனர்நிர்மாண புனரமைப்பு நடவடிக்கைகளை தாமதமின்றி நடைமுறைப் படுத்தும்படியும் புலிகள் தரப்பினர் வற்புறுத்துவர் எனவும் தெரிகின்றது.

---

**அதிபர்கள்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேடைப் பேச்சுக்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

விழா முடிவில் இடம்பெறும் நன்றியுரை கைவிடப்பட வேண்டும். அத்துடன் இந்த நேரம் விரயமாகக் கூடாது.

சகல வைபவங்களும் ஒன்றரை மணித்தியாலத்துள் முடிவுற வேண்டும்.

மாணவரின் பாண்ட் வாத்திய அணி நடையின் தூரம் நாற்பது மீற்றருக்கு அப்பால் செல்லக் கூடாது.

பரிசளிப்பு விழாக்களின் போது பல துறைகளில் பரிசு பெறும் மாணவர்களை மேடையில் திரும்பத் திரும்ப ஏற்றி இறக்கக் கூடாது. ஒரே தடவையில் அவர்களின் பரிசுகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

---

**மாங்குளம்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட திணைக்களம் கவனமெடுக்காமையால். பல. நோ. கூ. சங்கங்கள் இந்த தரம் குறைந்த மாவையே இப்பகுதி மக்களுக்கு விநியோகித்து. வருகின்றது இதனால் பாவனையாளர்கள் கட்டாயத்தின் பேரில் உணவு முத்திரைக்கும் ஜனசவிய திட்டத்தின் பேரில் உணவு முத்திரைக்கும் பெறவேண்டியுள்ளது. உரிய அதிகாரிகளின் கவனம் எடுக்கும் நிலை ஏற்படுமாவென மக்கள் அங்கலாய்க்கின்றனர். (60)

---

**அதிபரின்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துச் சென்று தடியினால் மாணவன் கதறக் கதற தாக்குதலை மேற்கொண்டதாகவும் மேற்படி மாணவனின் கத்தலைக் கேட்ட மாணவர்களோ சக ஆசிரியர்களோ வேதனை அடைந்த போதும் அதிபரின் தாக்குதலில் இருந்து மாணவனைக் காப்பாற்ற முடியாதவாறு பதவி தடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

தாக்குதலுக்குள்ளானமாணவனை பெற்றோர்களான சின்னத்துரை சின்னராசா திருமதி சின்னராசா ஆகியோர் எடுத்துச் சென்று மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மேற்படி மாணவனின் கால் ஒன்றின் எலும்பு நொருங்கிய நிலையில் இருப்பதாகவும் சத்திர சிகிச்சையளித்த வைத்தியர்கள் தெரிவித்ததுடன் நரம்புப் பகுதிகள் பாதித்துள்ளதாகவும் இரண்டாவது தடவையாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

இதுவிடயமாக மாணவனின் பெற்றோர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் வடமராட்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரனிடம் முறைப்பாடு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார்கள்.

இதனையடுத்து தாக்குதல் சம்பந்தமான விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (68)

---

...சிரியர்களின் சுய விபரங்கள் திருக்கோணமலை கல்விப் பகுதியால் சேகரிக்கப்பட்டு வருகிறது.

நகர்ப்புற பாடசாலைகளில் பட்டதாரி, சங்கீதம், மனையியல் பேர்ன்ற ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக இருப்பதும் தெரிவந்துள்ளது.

அத்துடன் கிராமங்களிலும் கஷ்டப்பகுதிகளிலும் இவர்கள் போதாது இருப்பதும் தெரியவந்துள்ளது.

மேலும் பல பாடசாலைகளில் பல ஆசிரியர்கள் பலகாலமாக பணிபுரிவதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனாலேயே இந்த இடமாற்றம் கிடைக்கவுள்ளது,

## விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளத் த...

(வவுனியா)

இவ்வாண்டு பாடசாலை ரீதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வவுனியா சைவப்பிரகாச தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறஉள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று மேற்படி பாடசாலையில், க.பொ.த. சாதாரணதர பரீட்சை எடுத்த மாணவர்கள் ஈழநாதத்திற்குத் தெரிவித்தனர்.

இவர்களில் பலர் இன்னும் பாடசாலைக்குச் ... ங்கள் கற்கின்றனர் என ... குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுப் ... ளில் கலந்து ... அதிபர் அனுமதி ... றார் என்று இ... யுடன் தெரிவி...

மேற்படி ப... தோற்றிய மா... பரீட்சை முடிவுக... வெளிவரவில்லை ... குறிப்பிடத்தக்க...

## சகல பாடசாலைகளிலும் மாதாந்தப் பரீட்சை

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல, பாடசாலைகளிலும் தவணை பரீட்சைகளைப் போல மாதாந்த பரீட்சைகளை நடாத்த கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னர் இப்பரீட்சை சகல பாடசாலைகளிலும் நடாத்தப்பட்டு வந்தன. ஆனால் நாட்டு நிலைமைகளால் இவை இல்லாமல் போயின.

மாணவர்களின் கல்வி நிலையை மாதாந்தம் அறிவதற்கு இப் பரீட்சை உதவுகிறது என கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் இப் பரீட்சை மூலம் மாணவர்களின் கல்வி வளரவும் வாய்ப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

**சுகாதார**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம் ஒன்றில் நேற்று கொழும்பில் உள்ள இத்தாலிய தூதுவர் குயினோ மாட்டீனையும், நிதியமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கமும் கைச்சாத்திட்டனர்.

சுகாதாரம், போஷாக்கு உணவு, அகதிகளின் நலன், சமூக நிலமை, நோய்பரவுவதை குடியேறும் பகுதிகளில் தடுப்பது, உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்கு தொழில் நுட்பம் போன்ற உதவிகளுக்கு இந்த நிதி பயன் படுத்தப்படும்.

---

**அடகு நகைகள்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளைகளில் பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகளை அடகு வைத்து, அவற்றை மீட்டு கொள்வதற்காக 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கு முன் பணத்தைக் கட்டியவர்களது நகைகள் தற்போது மீளளிக்கப்பட்டு விட்டமை குறிப்பிடத் தக்கது.

---

**மோட்டார்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் விபத்துக்குள்ளானதில் இருவரும் படுகாயத்துக்குள்ளானார்கள், இவர்கள் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இருவர் நிலையும் மிகவும் மோசமாக இருந்தமையால் அங்கிருந்து அம்புலன்ஸில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)

---

## விளைய... போட்...

(வடமராட்...)

ஹாட்லிக் கல்லூ... டாந்தவிளையாட்... யூன் மாதம் ஒன்ப... கல்லூரி விளையாட... னத்தில் நடைபெற...

கல்லூரி அதிபர் ... பாலசிங்கம் தலை... நடைபெறவிருக்கு... யாட்டுப் போட்டிக்... கலைப்பீடாதிபதி ... பாலகிருஷ்ணன் பி... தினராகக் கலந்து... றார்.

---

**திங்கள்...**

(1 ஆம் பக்கத் தொ...

பொலிஸ் திடீரென ... கொள்ளும் ரோந்து ... டிக்கைகளினால் எழுப்... சனைகளுக்கும் ஒரு சுமு... முடிவு காணும் பொ... அமைச்சர் ஹமீத் விடு... புலிகள் மக்கள் முன்... னருடன் கிழக்கு மா... துக்குச் சென்று பா... புப் படையினரைச் சந்... பேசவிருப்பதாகத் தெ...

திருக்கோணமலை ... படை குவிக்கப்படுவது... படை பயிற்சி இரவு ... களில் நடைபெறுவது... னால் மக்கள் பீதிய... இடம்பெயர்வதும் சா... நிகழ்ச்சியாகிவிட்டது ... காட்டப்பட்ட... தொடர்ந்து அங்கு நி... யைச் சீர் செய்... முக்கியமாக ஆலோசி... மெனத் தெரிகிறது.